# ஓலை 24

ஆசிரியர் : செங்கதிரோன்

**ஓலை 24** | கொழும்புத் தமிழ்ச்சங்க மாதாந்த மாசிகை

| திருவள்ளுவர் ஆண்டு : தி.பி 2035 | மீனம் (பங்குனி) | மார்ச் 2004 |
|---|---|---|

*21.03.2004, 22.03.2004 இருதினங்களும் நடைபெறும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அறுபத்தியிரண்டாவது சங்கத் தினவிழாவின் இறுதிநாளான 22.03.2004 ஞாயிற்றுக்கிழமை "சங்கச் சான்றோன்" விருது — 2004 வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ள கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் மூவர்.*



உயர்திரு
சபா. ஜெயராசா
அவர்கள்



உயர்திரு
இ. விக்னராஜா
அவர்கள்



உயர்திரு
சி.தில்லைநாதன்
அவர்கள்


**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**

7, 57 வது ஒழுங்கை (உருத்திரா மாவத்தை), கொழும்பு - 06.

தொலைபேசி : 011-2363759

வெப் முகவரி : www.colombo.tamilsangam.org

இணைய தபால் முகவரி : cts@eureka.lk


விலை : 25/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் திறந்து...

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 62வது ஸ்தாபக தினவிழா மார்ச் 21ம், 22ம் திகதிகளில் இருதினங்கள் கொண்டாடப்படவுள்ளன. அறுபத்தியிரண்டுஆண்டுகளுக்கு முன்னர் (22.03.1942) கொழும்புத் தமிழர் முன்னேற்றக்கழகம் எனும் பெயரில் தோற்றமாகிப் பின் கொழும்புத் தமிழ்ச்சங்கம் எனப் பெயர் மாற்றம் பெற்ற இச்சங்கம் தேசியரீதியிலும் சர்வதேசரீதியிலும் தமிழ் மொழி, இலக்கிய, கலை, பண்பாட்டு வளர்ச்சியில் பெருமைமிக்க பாரம்பரியமுடையது. சங்கப் பணிகளாற்றிய மூத்த உறுப்பினர்களைச் சங்கை செய்முகமாக கடந்த வருடம் நடைபெற்ற ஸ்தாபக தினவிழாவில் ஆரம்பித்து வருடா வருடம் மூத்த உறுப்பினர்கள் மூவருக்குச் "சங்கச் சான்றோன்" விருது வழங்கப் பெறுகிறது. சங்கச் சான்றோன் விருது - 2003 உயர்திரு கா.பொ.இரத்தினம், உயர்திரு.ஆர்.நமசிவாயம், மற்றும் உயர்திரு. பழனியப்ப செட்டியார் ஆகியோருக்கு வழங்கப் பெற்றன. இவ்வருடம் 'சங்கச் சான்றோன் விருது-2004 உயர்திரு சபா.ஜெயராசா, உயர்திரு இ.விக்னராஜா, மற்றும் உயர்திரு சி.தில்லைநாதன் ஆகியோருக்கு வழங்கப்பெறுகின்றன. இவர்களின் உருவப்படங்களே ஓலை'யின் இவ்விதழின் அட்டையை அலங்கரிக்கின்றன. 'ஓலை'யும் இப்பெரியார்களைச் சங்கை செய்து வாழ்த்தி மகிழ்கிறது. அவர்கள் பற்றிய கட்டுரையும் இதில் இடம் பெறுகிறது. மேலும், 'ஓலையின் இந்த இருபத்தி நான்காவது இதழுடன் 'ஓலை' பிறந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன. ஈழத்துத் தமிழ்ச் சூழலில் இலக்கியச் சிற்றிதழ் ஒன்று தொடர்ந்து வெளிவருதல் ஒரு சாதனையே. வாசகர்களாகிய உங்கள் ஆதரவு தான் இதற்கு அத்திவாரம். 2001 மார்ச் இலிருந்து கடந்த 2003 டிசம்பர்வரை இலவசமாக விநியோகித்த 'ஓலை' இவ் வருடம் 2004 ஜனவரியிலிருந்து விலை குறித்து விநியோகம் செய்யப்படுவதையும் நீங்கள் அறிவீர்கள். இத்துடன் இணைத்து அனுப்பப்படும் சந்தாப்படிவத்தைப் பயன்படுத்தி உங்கள் நண்பரொருவரைப் புதிய சந்தாதாரராக்கி உதவும்படி பணிவண்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நன்றி. மீண்டும் மறுமடலில்...**

— **ஆசிரியர்**

ஓலையில் வெளிவரும் ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச்சங்கம்
# "சங்கச் சான்றோன் - 2004" விருதுபெறும் மூவர்



## உயர்திரு.சபா ஜெயராசா

இன்றைய புகழ்பூத்த கல்விமான்களின் வரிசையில் தனக்கென ஒரு தனி இடத்தை வகித்துக் கொள்பவர் திரு.சபாரத்தினம் ஜெயராசா அவர்கள். இவர் மட்டுமல்ல எமது தமிழ்ச் சமுதாயமே பெருமை கொள்கிறது. இவர் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் பழம் பெரும் உறுப்பினராக விளங்கியவர். இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வியியற் பேராசிரியராக கடமையாற்றி வருகிறார். இவரை அறியாத கல்விமான்கள் இல்லையென்றே கூறலாம்.

இத்தகைப் பெருமையுடைய பெருமகன் யாழ்ப்பாணத்திலுள்ள இணுவிற்பதியில் தி.ச.சபாரத்தினம், திருமதி.அபிராமி அம்மா சபாரத்தினம் என்போரின் அருமை மகனாக 1942.02.27 ல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக்கல்வியை இணுவில் மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி என்பவற்றில் கற்றார். தனது மேற்படிப்பைப் பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம் என்பவற்றில் மேற்கொண்டார். கல்விமாணி, கல்வியியல் கலை முதுமாணி, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர்.

யாழ்.பல்கலைக்கழக தொழில் கல்வியியற் பேராசிரியராகவும், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி ஆலோசனைச் சபை உறுப்பினராகவும் யாழ் பல்கலைக்கழக இந்துமாமன்றப் பெரும் பொருளாளராகவும், கல்வியியல் ஆய்வுக் கழகத்தின் தலைவராகவும், யாழ் நடன ஆற்றுகைக் கழகப் போஷகராகவும் சிந்தனை வட்டத் தலைவராகவும், முன்னிலைக்கல்வி ஆலோசகராகவும் தென் ஆசிய சமூகவியற் கழக உறுப்பினராகவும் விளங்குகிறார். இதைவிட இணுவில் திருவூர் ஒன்றியத் தலைவராகவும் விளங்குகிறார். இவற்றைவிட பல சமூகத் தொண்டுகளையும் திரு.சபா ஜெயராசா அவர்கள் ஆற்றிவருகிறார். இவர் யாழ் இராமநாதன் நுண்கலைக்கழகத்தினதும் பட்டப்படிப்புகள் பீடம், கலைப்பீடம் முதலியவற்றின் பதிற் பீடாதிபதியாகவும் விளங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர் ஐம்பதிற்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவரது பெயர் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் உலகப் புகழ் பெற்ற New Frontiers in Education, The Mythical Journal முதலியவற்றில் வெளிவந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கவை. இவரது திறனாய்வு உளவியல், கல்வியியல், கலை, இலக்கியம் திறனாய்வுத் துறைகள் முக்கியமானவை. இவர் சென்னைப் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், அன்னை திரேசா பல்கலைக்-



கழகம், காமராசர் பல்கலைக்கழகம் முதலியவற்றில் கலாநிதிப் பட்டப் பரீட்சகராகச் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவரது உயர்மட்ட மேற்பார்வையில் 25க்கு மேற்பட்டோர் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளனர். கல்வியியலில் 150க்கு மேற்பட்டோர் மாணிப்பட்டம் பெற்றுள்ளனர். இவரிடம் படித்துப் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் தொகை ஏறக்குறைய மூவாயிரத்திற்கு (3000) மேல் எனலாம். இவற்றைவிட இவர் பல நூல்களை எழுதியுள்ளார். இவை கல்வியியல், புவியியல், உளவியல் விழுமியங்கள், இலக்கியங்கள், கதைகள், கவிதைகள், கல்விச் சிந்தனைகள், கல்வியியலில் புதிய சீர்திருத்தங்கள், ஆசிரியர்களுக்கான உளவியல், கற்பித்தல் முறைகள், திறனாய்வுகள், அழகியற் கல்விகள், சிறுவர்களுக்கான பாடல்கள், கதைகள் கட்டுரைகள் என ஐம்பதிற்கு மேற்பட்ட நூல்களை ஆக்கி அளித்துள்ளார்.

இவரது கண்டுபிடிப்புக்களைக் கற்பித்தலியலில் "இருதள அணுகுமுறை" Dual plane Approach, உளவியல் - "மனவெழுச்சி இயங்கியல் கோட்பாடு" (Enodalities Theory), "அறிக்கைச் சிக்கல் அமைப்பாக்கல் கோட்பாடு" (Congo - Complex - Formation Theory) என்பன குறிப்பிடத்தக்கவை.

இவர் பல சிறப்பு விருதுகளையும் பெற்றுள்ளார். "Man of the Year" - 2004 அதாவது "ஆண்டின் உலக மனிதர்" 2004 என அமெரிக்க நூற்பட்டியல் நிறுவனத்தால் கௌரவிக்கப்பட்டுள்ளார். ஐந்திற்கு மேற்பட்ட நூல்களுக்கு அரச விருதுகளைப் பெற்றுப் பெருமை அடைந்துள்ளார்.

கொழும்புத் தமிழ் சங்கத்துடன் இவரது தொடர்பு எவ்வாறு அமைந்திருந்தது என்று பின்நோக்கிக் பார்க்கும் போது இவர் 1970 ம் ஆண்டில் கொழும்புத் தமிழ்ச்சங்க ஆயுட்கால உறுப்பினராகச் சேர்ந்துள்ளார். இவரது சேவை 1980ம் ஆண்டுவரை அதாவது இவர் யாழ்ப்பல்கலைக்கழகத்திற்குக் கடமையாற்றச் செல்லும் வரை மிக நெருங்கியதாக அமைந்திருந்தது. இவர் 1970 -1980 ஆண்டுக் காலப்பகுதியில் இலக்கியக் குழுச்செயலாளராகவும், கல்விக் குழுச் செயலாளராகவும் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் கடமை ஆற்றியுள்ளார். இக்காலத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்க நூலக விரிவாக்கத்திற்காகப் பெரும் உதவிகளை ஆற்றினார். வீடு வீடாகச் சென்று நூல்களைச் சேகரிக்கும் பணியிலும் ஈடுபட்டார். கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடான "முருகு" வெளிவருதலில் கூடிய பங்கை ஆற்றியுள்ளார். இலக்கியம், கல்வி சம்பந்தமான கருத்தரங்குகள், இந்தியாவிலிருந்து வரவழைக்கப்படும் அறிஞர்களின் வருகை, சொற்பொழிவுகள் முதலியவற்றிலும் துணையாக இருந்தார்.

அப்போது கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் திரு.இரத்தினம், திரு.பாண்டியனார் முதலியோரினால் செயற்படுத்தப்பட்ட திருக்குறள், தொல்காப்பியம், தமிழ் மொழி பற்றிய பல வகுப்புகளிலும் கலந்துரையாடல்களிலும் பங்கு கொண்டு தாமும் படித்து, அவர்களுக்கும் உறுதுணையாக விளங்கினார். அன்னாரை "சங்கச் சான்றோன் 2004" விருது அளித்துச் சங்கை செய்வதில் கொழும்புத் தமிழ்ச்சங்கம் பெருமை கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உயர்திரு.இ.விக்னராஜா

இளையதம்பி தங்கம்மா ஆகியோரின் புத்திரரான விக்கினராஜா யாழ்.சண்டிலிப்பாய் கல்வளை என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆரம்பக் கல்வியைச் சண்டிலிப்பாய் இந்து பாடசாலையிலும், பின்பு பதுளை ஊவாக் கல்லூரியிலும் கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரியில் உயர் கல்வியையும் கற்று கொழும்பு சர்வகலாசாலையில் BSC பட்டம் பெற்றார்.

1964 - 1986 வரையும் கொட்டாஞ்சேனை நல்லாயன் மகளிர் கல்லூரியின் ஆசிரியராகக் கடமைபுரிந்தார். அக்காலத்தில் ஆசிரியையான ஆனந்தசோதியை திருமணம் செய்து திரிவேந்திரன், கிருஷாந்தி ஆகிய இரு செல்வங்களைப் பெற்றெடுத்தார்.

ஆசிரியராகக் கொழும்பில் கடமை பார்க்கும் போது கொழும்புத் தமிழ்ச் சங்கம் செய்துவந்த நற்பணிகளைக் கண்டு 1965இல் அங்கத்தவராகச் சேர்ந்து தமிழ்த் தொண்டு புரிந்து வந்தார். தமிழ்ச்சங்கக் கல்விக்குழுவின் ஒரு ஆலோசகராக இருந்து அப்போது கல்விக்குழு நடத்தி வந்த வகுப்புகளிற்குக் கணித, பௌதிக ஆசிரியராகவும் கடமைபுரிந்தார். தமிழ்ச்சங்கம் நடத்தி வந்த இலவச வகுப்புகளுக்கு உதவி செய்ததுடன் கொழும்புவாழ் கொடை வள்ளல்களிடம் சென்று கட்டிடம் கட்டுவதற்குத் நிதி திரட்டி கட்டிடத்தை ஆரம்பித்தார். இது ஒருவராலும் மறக்க முடியாதது. 1948ம் ஆண்டு வாங்கப்பட்ட காணி 1970 வரையும் கட்டிடம் கட்டமுடியாமல் பல்வேறு இன்னல்களை நோக்கி இருந்தது. கட்டிடத்தை அமைத்த பெருமை அக்காலத் தலைவர் காலஞ்சென்ற பொ.சங்கரப்பிள்ளை அவர்களுக்கும், பொதுச் செயலாளர் இ.க.கந்தசாமி, பொருளாளர் இ.விக்னராஜா அப்பொழுது இருந்த அங்கத்தவர் அனைவருக்கும் சேரும்.

முன்னாள் தலைவர் காலஞ்சென்ற திரு.வயிரவப்பிள்ளை அவர்களால் திரு.விக்கினராஜா பாராட்டப்பட்டுள்ளார். தரப்படுத்தல் முறை அரசாங்கத்தால் திணிக்கப்பட்ட வேளையில் மாணவர்களின் அனுதாப நிலை கண்டு மேலதிக அறிவைப் பெறுவதற்காக சர்வ கலாசாலைப் பேராசிரியர்களைக் கொண்ட மேலதிக வகுப்புகளை நடாத்த உதவியும் புரிந்துள்ளார்.

அன்றைய நாட்களில் அநாதைப் பிள்ளைகளின் நிலை கண்டு கல்வி, வேலைவாய்ப்புப் கொடுப்பதற்காக 1980ம் ஆண்டில் தமிழ்ச்சங்கம் இட்ட திட்டத்திற்கு அமைவாக மாங்குளத்தில் 12 ஏக்கர் காணியை வாங்குவதற்குத் தூண்டுகோலாக இருந்தார்.

1980ல் சங்கத்தின் பொருளாளராக விளங்கிய போது சங்கக் கட்டிடத்தின் 2ம் மாடியைக் கட்டிமுடித்துப் பின் தன்னுடைய ஆசிரியர் தொழிலைத் தொடர்வதற்காக அமெரிக்கா சென்றார். அமெரிக்கா சென்றிருந்தும் கொழும்புத் தமிழ்ச்சங்க முன்னாள் பொதுச் செயலாளர் திரு.இ.க.கந்தசுவாமிக்கு பல்வேறு உதவிகளைப் பெற்றுக் கொடுத்துத் தமிழ்ச்சங்கம் சர்வதேசத்தில் புகழ்பெறக் காரணமாய் இருந்தார். தனது மாமனார் ஆகிய கனகசபாபதி பேரால் சிறுதொகைப் பணத்தைத் தமிழ்ச் சங்கத்தின் வைப்பிலிட்டு வட்டியாக வரும் பணத்தைப் பரிசில் வழங்குதற்கு ஏற்பாடுகள் செய்தார்.

திரு.விக்னராஜா அவர்கள் அமெரிக்கா சென்றதும் தமிழ்ச்சங்கத்தில் செய்த சேவைகளை தொடர்ந்து அமெரிக்காவிலும் செய்ய ஆரம்பித்தார். திரு.விக்னராஜா Maryland stateஐ சென்றடைந்து Saltimore நகரில் ஆசிரியராகக் கடமை பார்த்தார். அமெரிக்கா சென்றடைந்ததும் படிப்பிக்கும் தொழிலில் இருந்துகொண்டே மேற்படிப்பையையும் தொடர்ந்து Masters (MSC) படிப்பையும் முடித்து PHD படிப்பைத் தொடர்ந்தார். Moha State பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். இருபிள்ளைகளையும் படிப்பித்ததுடன் தாங்கள் படித்துப்பட்டம் பெற்றது மாத்திரம் இல்லாது (Boltimore) போல்ரிமோர், Washington களிலும் உள்ள தமிழ் இந்திய சங்கங்களிலும் சேர்ந்து பல சங்கங்களின் தலைவர்களாக இருந்து தமிழ் கல்வி கலாசாரம் என்பவற்றைக் காட்டவும் கற்பிக்கவும் இரவு பகலாக உழைத்து வந்தார்.

திரு.விக்கினராஜா அவர்கள் washington வட்டார தமிழ் சங்கத் தலைவராக 1995ம் ஆண்டு இருந்தனர். இலங்கைப்பிரச்சினை கடுமையாக இருந்த காலத்தில் "Tamil Welfare and human rigjts" committee of USA" என் ஒரு சங்கம் Boltimore ல் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் மூலமாக இலங்கைப் பிரச்சினையை Amierica politiations அமெரிக்க அரசியல்வாதிகட்கு அறிமுகப்படுத்தவும் உயிர் இழந்த நண்பர்களிற்கு அஞ்சலிக் கூட்டங்கள் வைக்கப்பட்டு ஆறுதல் சொல்லவும் பயன்படுத்தப்பட்டது. இந்த நிறுவனத்திற்கு விக்கினராஜா அவர்கள் 1985ம் ஆண்டு தொடக்கம் 1995 ம் ஆண்டு வரைக்கும் தலைவராக இருந்து அரும் பணி செய்தார்.

1993ம் ஆண்டு India forum of Boltimoreல் இந்திய - சங்கத்திற்குத் தலைவராக இருந்து தமிழர்களின் கலை கலாசாரத்தை வட இந்தியர்களிற்கும் அமெரிக்கர்களிற்கும் மேடையேற்றி அறிமுகப்படுத்தக் கடுமையாக உழைத்தார். அதன் விளைவாக அமெரிக்க நண்பர்கள் கலைகளையும், உணர்வுகளையும், இரசிக்க ஆரம்பித்து India forumத்தின் மேடை ஒரு Berdict ஆக அமைந்திருந்தர். தமிழ் நாட்டுப் பிரச்சினைகளான வேலையின்மை, கல்வியின்மை, வறுமை போன்றவைகளை ஈடுசெய்யும் நோக்குடன் தமிழ்நாடு அறக்கட்டளை (Tamil Nadu Foundation) என்ற ஒரு சங்கத்தை Boltimoreல் உள்ள தமிழ்நாட்டு நண்பர்கள் 1990ம் ஆண்டு உருவாக்கினர். அவர்களின் வறுமையை நீக்க ஏதாவது தொண்டு செய்யும் நோக்குடன் அதில் அங்கத்தவராகச் சேர்ந்து 1995ம் ஆண்டுகளில் அதன் செயலாளராகவும் கடமை புரிந்தார். அமெரிக்காவில் இப்பொது 27ற்கும் அதிகமான தமிழ்ச்சங்கங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும் நோக்குடன் ஒரு வட அமெரிக்க கூட்டச் சங்கம் (Fedaration of Tamil Sangams of North America) 1990ம் ஆண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டது. இதற்கு திரு.விக்கினராஜா அவர்கள் அதன் இரண்டாம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதன் மகாநாட்டை தமிழ் நாட்டில் இருந்து தமிழ் அறிஞர்களையும், கலைஞர்களையும் வரவழைத்து Washington ல் நடாத்திப் பெரும் புகழ் பெற்றார்.

அந்நிய நாடாகிய அமெரிக்காவில் குடும்பத்தோடு 25 வருடங்கள் இருந்து வேலைபார்த்து இரு செல்வங்களையும் தமிழ்க் கலாசாரத்தில் வளர்த்து மிகச் சிறந்த சர்வ கலாசாலைகளில் கல்வி கற்பித்து பெரும் பட்டங்களை பெறச் செய்த பாக்கியம் திரு.திருமதி விக்கினராஜா இருவர்களினதும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று சொல்வதே பொருந்தும் அதற்கு மூல காரணமாக இருந்தது தமிழர்களின் அன்பு, தமிழ்ப்பற்று, பிறர் நன்மை கருதலே ஆகும். இவர்களின் மகன் திருவேந்திரன் "Yale பல்கலைக்கழகத்தில் B Sc பட்டம் பெற்று லண்டனில் உள்ள "Kings College" ல் Medical law படித்து இப்பொழுது Harvart Universityல் சட்டம் படித்துக் கொண்டிருக்கின்றார். இவர்களின் மகள் கிருஷாந்தி Yale பல்கலைக்கழகத்தில் Bsc, Msc பட்டம் பெற்று Marshall Scolar ஆக தெரிவு பெற்று Oxford University ல் PHD பட்ட வகுப்பில் படித்துக் கொண்டிருக்கின்றார்.

தமிழர்களின் பிள்ளைகளிற்கு சொந்த மனச் சாந்தியையும் ஈடுசெய்வதற்காக முருகன் ஆலயம் கட்ட Boltimoreல் உள்ள தமிழர்கள் ஆரம்பித்தனர். இதை நிறைவேற்றுவதற்காக வீடு வீடாகச் சென்று பணம் சேர்த்து அதன் விளைவாக "Murugan temple of North America" என்ற கோவில் Whington Capitalல் கம்பீரமாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. இன்றும் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தை மறவாது அதன் மூலமாக அநாதைப் பிள்ளைகளுக்குப் போர்ச் சூழலில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எவ்வாறு உதவி செய்யலாம் என்ற ஆலோசனைகளை எமக்குக் கூறி வருகிறார். அன்னாருக்கச் "சங்கச் சான்றோன் விரு" 2004 வழங்கிக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சங்கை செய்கிறது.



## உயர்திரு சி.தில்லைநாதன்

02.05.1937 அன்று யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த தில்லைநாதன் தனது ஆரம்பக் கல்வியைச் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் பெற்றார். 1948ம் ஆண்டில் அவரது இடைநிலைக் கல்வி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆரம்பமாகியது. இவர் காலத்தில் அங்கு ஒறேற்றர் சி.சுப்பிரமணியம் அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். எஸ்.எஸ்.சி.சித்தியடைந்த பின் கிளறிக்கல்" பரீட்சைக்குத் தோற்றி அதில் வெற்றி பெறவே 1956ம் ஆண்டு ஐப்பசி மாதம் இராணுவத் தலைமையகத்தில் எழுதுவினைஞராக நியமனம் பெற்றார். 'பின்னர் எச்.எஸ்சி. பரீட்சைக்கு இரண்டாவது முறையாகத் தோற்றிச் சித்தியடைந்து 1957 யூலை மாதம் முதலாம் திகதி பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. தமிழ், பொருளியல், வரலாறு ஆகியனவே அவர் பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடம் எடுத்துக் கொண்ட பாடங்கள். பின் தமிழைச் சிறப்புப் பாடமாகவும், வரலாற்றை உபபாடமாகவும் கற்று 1961இல் பல்கலைக்கழகக் கல்வி நிறைவெய்தியது. பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த போது பேராதனைக் கவிதைகள் (Peradeniya Poetry) என்ற சஞ்சிகையின் ஆசிரியராக இருந்துள்ளார். அத்துடன் இந்துதர்மம், இளங்கதிர், முஸ்லிம் மஜ்லிஸ் சஞ்சிகைகளில் எழுதினார். இந்துமாணவர் சங்கம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதற்பரிசையும் இளங்கதிர் 1959இல் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசையும், 1960 இல் நடாத்திய போட்டியில் முதலாம் பரிசான தங்கப்பதக்கத்தைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் கையாலே அணிவிக்கவும் பெற்றார். பல்கலைக்கழகத்தில் முதற்தரத்தில் சித்தியெய்தி ஆறுமுகநாவலர் ஞாபகார்த்தப் பரிசையும் பெற்றுக் கொண்டார். 1961இல் இருந்து 1964 வரை ஏரிக்கரைப் பத்திரிகைகளான ஒப்சேவர், தினகரன் ஆகியவற்றின் ஆசிரியர் குழுவில் கடமைபுரியும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஏரிக்கரைப் பத்திரிகைகளிற் பணியாற்றிக் கொண்டே 1962இல் இருந்து 1964 வரை வித்தியோதயப் பல்கலைக்கழகத்தில் வருகை தரு விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1964 இல் தமிழ் முதுகலைமாணிப்பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலே முதன்முதலாகத் தமிழ் உதவி விரிவுரையாளர் பதவியொன்று தோற்றுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து 1964 ஒக்டோர் முதல் 1965 ஏப்ரல் வரை அங்கு நிரந்தரப்பதவி வகித்தார். அதன்பின் தான் படித்த பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நிரந்தர விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1965- 1969 காலப்பகுதியில் உதவி விரிவுரையாளராகவும், 1969 - 1975 காலப்பகுதிகளில் விரிவுரையாளராகவும், 1975 - 1985 காலப்பகுதிகளில் முதுநிலை விரிவுரையாளராகவும், 1985 முதல் 1991 வரை இணைப் பேராசிரியராகவும், 1991 முதல் 1996 வரை தமிழ்ப் பேராசிரியராகவும் 1996 - 2002 காலப்பகுதியில் முதுநிலைப் பேராசிரியராகவும் திகழ்ந்தார்.

பல்கலைக்கழக ஆசிரியராக 1965இல் நியமனம் பெற்றதன் பின், தமிழ் நாட்டில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் மு.வரதராசன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் தமிழ் அரசவை இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்து முது இலக்கிய மாணிப்பட்டத்தை 1969 இல் பெற்றுக் கொண்டார். முது கலைமாணிப் பட்டம் பெறுவதற்கு முன்னரே இவர் பல்வேறு காலகட்டங்களில் எழுதிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டு "வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை" என்ற மகுடமிடப்பட்டு 1967 இல் தமிழ்ப்புத்தகாலய வெளியீடாக வந்தது. கற்றோர் மதிப்பைப் பெற்றது. இதுவரை மூன்று பதிப்புகள் கண்ட பெருமை அந்நூலுக்கு உண்டு. அந்நிறுவனமே மீண்டும் 1987 இல் "இலக்கியமும் சமுதாயமும்" என்ற நூலையும் வெளியிட்டது. "சூழலும் சமுதாயமும் பண்பாடும் - சுவாமி விபுலானந்தர் நோக்கு" (1992) 'இலங்கைத் தமிழ் இலக்கியம்" (1997) "பண்பாட்டுச் சிந்தனைகள்" (2000) என்பன இவரது ஏனைய நூல்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில் இளம் விரிவுரையாளராக அவர் கடமையாற்றிய காலங்களில் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தின் பால் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். தமது ஆசிரியப் பெருந்தகைகளின் வழி நின்று நாடகங்களை எழுதியும், அவற்றை மேடையேற்றியும் வெற்றி கண்டார். 1973 இல் "தகுதி" என்ற நாடகத்தையும் 1974இல் "மானிடம் என்பது புல்லோ" என்ற நாடகத்தையும் எழுதியும் தயாரித்தும் மேடையேற்றினார். யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தின் சாதியக் கட்டுமானங்களைத் தகர்த்தெறிவதற்கான சிந்தனைகளை இந்நாடகத்தின் வழி அவர் முன்வைத்தார்.

06.09.1970 இல் சங்கானையைச சேர்ந்த கா.வைத்திலிங்கம் தம்பதிகளின் புதல்வி மல்லிகாதேவியைத் திருமணம் செய்து கொண்டார். மனமொத்த இல்லறத்தின் விளைவாக 1971 இல் கவிதா என்ற மூத்தமகளும், 1973 இல் அரவிந்தன் என்ற மகனும் 1979இல் திருமகள் என்ற இளைய மகளும் பிறந்தனர்.

பல்கலைக்கழக மட்டத்திலும் வெளியிலும் அவர் செல்வாக்கு மிக்க பேராசிரியராக விளங்கினார். தமிழ்த்துறையின் தலைவராகத் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கும் மேலாக அவர் கடமைபுரிந்தமை அவரது செயற்திறன் மிக்க, அரவணைத்துப் போகும் தலைமைக்குக் கிடைத்த பரிசு, மேலும் 1985 இல் இருந்து அதே பத்தாண்டு காலத்துக்குத் தமிழ்ச்சங்கத்தின் பெருந் தலைவராகவும் விளங்கிய பெருமைக்குரியவர். 1989இல் இருந்து பல்கலைக்கழக 'கலைக்கழகத்தின்' அங்கத்தவர். 1985 - 1992 காலப்பகுதியில் குறிஞ்சிக்குமரன் ஆலயப் பொறுப்பாண்மைக்குழுவின் தலைவர். 1974 - 79 காலப்பகுதியில் இந்து மாணவர் சங்கத்தின் பெருந்தலைவர். 1990இல் இருந்து 1995 வரை சங்கீத, நாட்டிய சங்கத்தின் பெருந்தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகச் சஞ்சிகையான Sri Lanka Journal of the Humanitics இன் 1980 - 1991 காலப்பகுதி ஆசிரியர் குழு உறுப்பினர்.

பல்கலைக்கழகத்துள் எவ்வாறான பணிகள் அவரைப் பிணித்துக் கொண்டனவோ அவ்வாறே வெளியிலும் அவரது பணிகள் பரந்தன. 1971 - 78 காலப்பகுதியில் இலங்கை கலாசார அமைச்சின் கலாசார கழகத் தமிழ் இலக்கியக் குழுவில் அங்கத்துவம் வகித்துள்ளார். 1971 தொடக்கம் 1974 வரையில் அதன் தமிழ் நாடகக் குழுவிலும் அங்கம் வகித்துள்ளார். பின்னர் 1994 முதல் 1997 வரை தமிழ் இலக்கியக் குழுவின் தலைவராகவும் இயங்கினார். இலங்கைக் கலைக்கழகத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டார்.

இலங்கையின் தேசிய கல்வி மாற்றங்களின் போதும் பேராசிரியரது பணி உணரப்பட்டுள்ளது. க.பொ.த.உயர்தரப் பாட நூல்களின் மீளாய்வுக்குழு அங்கத்தவர். தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழித் துறையின் ஆலோசனைச்சபை அங்கத்தவர், தொலைக்கல்விப் பிரிவின் பாடத்திட்ட குழுவினது அங்கத்தவர், ஆலோசகர். 1995 - 1996 காலப்பகுதியில் தமிழ் மொழித்துறையின் நிபுணத்துவ ஆலோசகர் (இப்பதவி ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியினால் வழங்கப்பட்டது) அந்நிறுவனத்தின் ஆட்சிச்சபை (Council) உறுப்பினராகக் கடமையாற்றினார்.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். 2000 - 2001 காலப்பகுதியில் இலங்கைப் பத்திரிகைச்சபை உறுப்பினராகவும் செயற்பட்டார். 1977ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் கலைக்குழுவொன்றில் அங்கம் வகித்து பேர்லினுக்கு விஜயம் செய்தார். இலங்கையின் மூத்த எழுத்தாளர்களும் கலைஞர்களும் இக்குழுவில் அங்கம் வகித்தனர். 1995 யூன் மாதம் மிச்சிக்கன் மாநிலப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று, ஐக்கிய அமெரிக்க நாட்டின் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். "சமூகங்களிடையே காணப்படும் முரண்பாடுகள் தொடர்பான கற்கை" ஒன்று தொடர்பானதாகவே இவ்விஜயம் அமைந்தது. இலங்கையின் பிரபலம் மிக்க கல்விமான்கள் இக்குழுவில் இணைந்து பயணம் செய்தனர். 1995 ஆம் ஆண்டு தமிழக விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறையினரின் வேண்டுகோளிற்கிணங்க "இலங்கைத் தமிழ் இலக்கியத்தின் அண்மைக்காலப் போக்குகள்" பற்றிக் கருத்துரை வழங்கினார். 1996 ஆகஸ்ட்டில் தமது மூத்த மகள் கவிதாவின் திருமணத்தைக் கனடாவில் நடத்தி வைக்கக் கனடா சென்று வந்தார். அதன்பின் "வாஷிங்டன் ரைம்ஸ் பவுண்டேசன்" இவரைச் சிறப்பு விருந்தினராக மீண்டும் ஐ.அமெரிக்காவிற்கு அழைத்த போது உடல்நிலை காரணமாகப் பயணம் மேற்கொள்ளவில்லை.

இலங்கை இந்து கலாசார இராஜாங்க அமைச்சு 1993 இல் 'இலக்கியச் செம்மல்' விருது வழங்கிக் கௌரவித்தது. இலங்கை சனாதிபதி 1994 இல் 'கலாகீர்த்தி' என்ற தேசிய விருதினை அளித்துக் கௌரவித்தார். கலை, இலக்கியப் பங்களிப்பிற்கான வடகிழக்குமாகாண ஆளுநர் விருதையும் 1999இல் பெற்றார்.

பேராசிரியர் அவர்கள், நல்ல ஆசிரியராக, சிறந்த நண்பனாக, உத்தம குடும்பத் தலைவராக ஆலோசகராக, பணிப்பாளராக, ஆராய்ச்சியாளனாக விளங்கி வருகின்ற போதும் அவரது 'மனிதாபிமானம்' பேணும் உணர்வு ஒன்றே அவரை நல்ல ஒரு மனிதனாக இனம் காட்டியுள்ளது. தற்போது இலங்கை அரசகரும மொழி ஆணைக்குழுவின் உறுப்பினராகித் தற்போது இவ்வாணைக்குழுவின் பதில் தலைவராகவும் உள்ளார். அத்துடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியருமாவார். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் மூத்த உறுப்பினர்களின் ஒருவரான பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் கடந்த காலங்களில் சங்கத்தின் பொறுப்பான பதவிகள் எதனையும் வகிக்காவிட்டாலும் கூட கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடாத்திய தமிழ் விழாக்கள், இலக்கியக் கருத்தரங்குகள், நூல் வெளியீட்டு / அறிமுக விழாக்கள் என பல்வகைப்பட்ட இலக்கிய நிகழ்வுகள் பலவற்றில் பங்கு பற்றிப் பங்களிப்பு வழங்கியவராவார். கொழும்புத் தமிழ் சங்கம் "சங்கச் சான்றோன் விருது 2004" வழங்கி அன்னாரைச் சங்கை செய்வதில் பெருமிதம் அடைகிறது.

திரு.ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி,
பொதுச்செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச்சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய வாழ்வில் இடறிய சம்பவங்கள் 9

கலாபூஷணம்.ஏ.இக்பால்

**1959** பிற்பகுதியில் 'ஷெல் கொம்பனி'யில் வேலை செய்து கொண்டிருந்த சில்லையூர் செல்வராசனைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவரைச் சந்தித்தபோது, உடனே கோட்டையில் பிரபல 'ஹோட்டல்' ஒன்றுக்கழைத்துச் சென்று குளிர்பானம் வாங்கித் தந்து உபசரித்தார். இந்த விடயத்திலும் அவர் ஒரு செல்வராசனேதான் என்பது அவரைச் சந்தித்தவர்கள் கூறியதைக் கேட்டிருக்கின்றேன்.

'ஷெல் கொம்பனி' தேசியமயமாக்கப்பட்ட பின், செல்வராசன் அதிலிருந்து விலகி கோட்டையில் ஒரு மேல்மாடி அறையில் Copy Writer என்ற தனிநபர் விளம்பர நிறுவனமொன்றை ஆரம்பித்தார். எதிலும் கூர்மையான நோக்குடைய செல்வராசன் விளம்பரக் கலையிலும் அவ்விதக் கூர்மையைச் செலுத்தியவர். குடும்பக் கட்டுப்பாட்டின் விளம்பரத்தை அவர் சிறந்த உத்தியுடன் செய்தவர். எல்லோரும் பிள்ளைப் பெறாமல் கட்டுப்படுத்த வேண்டுமெனச் சிந்திக்கும் போது, அளவான குடும்பமே குதூகலக் குடும்பம் என்ற தோரணையில் விளம்பரம் செய்தவர் செல்வராசன். அவரது சிறந்த நுட்பங்களில் ஒன்று வானொலியில் தமிழ் மொழியின் எந்தச் சொற்களைப் பிரயோகிக்கக் கூடாது. எந்த எழுத்தை எப்படி உச்சரிக்க வேண்டும் என ஆய்ந்து வைத்திருந்தார். சிலவேளை மெல்லின எழுத்தை வல்லின உச்சரிப்பாக்க வேண்டும். இல்லாவிடில் அது கருத்தைக் கொடுக்காது காற்றில் உலர்ந்து விழும் எனக் கூறுவார். இந்த ஆய்வினால், இத்துறைசார்ந்த மேல்நாட்டு ஆய்வாளர்களைக் கவர்ந்திழுத்த சங்கதிகளும் அவர் வாழ்வில் நடந்துள்ளன. ஒருநாள் நானும் எம்.எஸ்.எம்.இக்பாலும் தற்செயலாக பம்பலப்பிட்டிய சந்தியில் செல்வராசனைச் சந்தித்தோம். அப்போது, அவர் "இன்று பி.பி.ஸியினர் இலங்கை வானொலி நிலையம் வந்திருக்கின்றார்கள். அக்கூட்டத்திற்குச் செல்கின்றேன். நீங்களும் என்னுடன் வாருங்கள்" என்றழைத்தார். அங்கே, வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பு, அதில் வரும் மொழி அனுசரணை பற்றி விவாதம், கருத்துரை நடந்தன. பின் வரிசையில் இருந்த செல்வராசன் இவ்விடயம் சம்பந்தமாகப் புதுமையாகவும், வித்தியாசமாகவும் தனது கருத்தை எடுத்துரைத்தார். பெரும் பெரும் கலை விற்பன்னர்கள், பல்கலைக்கழக மேதைகள் முன்வரிசையில் இருந்தனர். பி.பி.ஸியினர், பின்னே எழுந்து நின்று கதைத்த செல்வராசனை முன்னே வருமாறு, கைகளைச் சுழற்றி அழைத்தனர். அவரது பேச்சுக்கு மிக முக்கியமளித்தனர்.

"கொப்பி றைட்டர்" விளம்பர தாபனம் இலக்கிய சந்திப்பின் முக்கிய இடமாகவும் இருந்தது. அங்கேதான், எம்.எஸ்.எம்.இக்பால், கே.எஸ்.சிவகுமாரன், காவலூர் ராசதுரை ஆகியோரது அறிமுகம் எனக்குக் கிடைத்தது. உலக இலக்கியப் பரிவர்த்தனைகூட, தமிழ் இலக்கியப் பாரம்பரியத்துடன் பேசப்படும் இடமாகவும் இருந்தது.

கிரியா ஊக்கியுடன் போக்கிடம் இல்லாத ஒரு படைப்பாளிக்கு, புகலிடம் கொடுத்தது இளங்கீரனின் மரகதத்தின் புதை குழியில் எழுந்த அரசு பதிப்பகம். ஆட்டுப்பட்டித் தெருவுக்கு புத்தகம் போட எத்தனிப்போர், பத்திரிகைகளில் தனது படைப்புக்களை பறைசாற்ற நினைப்போர் யாவரும் சரித்திரமறியாது படையெடுத்தனர். 'இளம் பிறை'யும், பல தமிழ் நூல்களும் இதனால் வெளியாகின.

1964 களில் வெளியான கனகசெந்திநாதன் அவர்களின் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" இதில் முக்கிய இடம் பெறுகிறது. காரணம் :- இலக்கியப் புரட்டர்களின் எத்தனங்களை இலக்கியம் எனப் பதிவு செய்வதற்கு கனகசெந்திநாதன் மாஸ்டரின் பெயர் இங்கே பாவிக்கப்பட்டுள்ளமையை எடுத்துத் தோலுரிக்க வேண்டிய ஒரு முக்கியம் அக்காலம் ஏற்பட்டது. அக்கைங்கரியத்தைச் செய்தவர் சில்லையூர் செல்வராசன் அவர்கள்தான்.

அக்காலம் "கொப்பி றைட்டர்" காரியாலயத்திலிருந்து தொழிலுக்கிடையில் மிகக் காரசாரமாகக் கனக செந்திநாதன் உடைய நூலுக்கு வரலாற்று ரீதியாக ஒரு பெரும் மறுப்பைச் சில்லையூர் செல்வராசன் தினகரன் ஞாயிறு வெளியீட்டில் 1964 ஜூன் 7ஆந் திகதியிலிருந்து எழுதத் தொடங்கினார். தொடர் கட்டுரையில் முதலாவது வெளிவந்த தலைப்பு "இலக்கிய வரலாறு எழுதுவோருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள்" என்பதே. இக்கட்டுரைக்கு அறிமுகமாக பத்திராசிரியர் கருத்து, பெட்டி கட்டிப் போடப்பட்டது. அக்கருத்து இதோ:- "தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழ நாட்டவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. ஈழத்துப் பூதந்தேவனார் காலந்தொட்டு இற்றைவரைத் தோன்றிய இலக்கிய கர்த்தாக்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம் பெறுவர். இத்தகு பெருமை இடத்தினை ஈழத்தவர் பெற்றிருந்தும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றினைத் தொடர்பாகக் காய்தல் உவத்தலின்றிக் கூறும் முழு நூலொன்றைத் தோற்றுவிக்க எவரும் முன்வந்திலர். எனவே, அண்மையில் திரு.கனக செந்தி நாதன் வெளியிட்டுள்ள "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தற்காலம் இலக்கியம் பற்றியே சிறப்பாக கூறினும் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆனால், ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றேடு என்று இந்நூலினை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? இது சர்ச்சைக்குரிய விஷயம். இந்நிலையில் இந்நூலின் பதிப்புரை கூறும் சில குறிப்புக்களையும் நாம் நோக்குதல் விரும்பத்தக்கது. "பெரும்பாலான எழுத்தாளர்களுக்குத் தற்கால இலக்கிய வரலாற்றறிவு கிடையாது. அத்தகைய வரலாற்றினைச் சொல்லக்கூடிய நூலும் இதுவரையில் வெளிவரவில்லை. அவ்வப்பொழுது எழுதப்படும் கட்டுரைகளில் வரலாறு அழிவழக்காடப்படுகின்றது. குழுக்களின் அல்லது வட்டாரங்களின் நலன்களைப் பேணும் வகையிற் வரலாற்றுச் செய்திகள் திரிக்கப்படுகின்றன.

"இந்நூல் எழுத்தாளர்களுக்கும் தற்கால இலக்கிய வரலாற்று மாணாக்கர்களுக்கும் நிச்சயம் பெரிதும் உபயோகமாக இருக்கும். அத்துடன் ஈழத்தின் தமிழ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய முயற்சிகளைப் பற்றி அறிய விளையும் தென்னக எழுத்தாளர்களுக்கு இந்நூல் தேவையான தகவல்களைத் தருகின்றது.

"ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்றும் நின்று நிலவப் போகும் அரிய நூலாகும். வருங்கால இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு இந்நூல் பலமான அத்திவாரமாக அமைந்துள்ளது. இந்நூலினைப் பதிப்பித்தவர்களின் நோக்கும் இத்தகையதாகயிருப்பின் இவ்வபிலாசைகளை நிறைவேற்றும் தகைமைத்ததா இந்நூல் என ஆய்தல் பயனுடைத்து.

எனவே, இவ்வாரம் திரு.சில்லையூர் செல்வராசனது கருத்தினை இவண் தருகின்றோம். மற்றும் அறிஞர்கள் கூறும் கருத்துக்களும் முறையே ஈண்டு தரப்படும். "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்று தானே எங்கள் தமிழ் முனியும் கூறிப் போந்தார்.

கனக செந்திநாதன் அவர்கள் இலக்கிய முயற்சியில் ஈடுபட்டு முன்பு எழுதியவற்றைச் சில்லையூர் செல்வராசன் தொடுகிறார். ஈழகேசரியில் "ஈழத்துப் பேனா மன்னர்கள்" தொடர் அம்சம், ஈழகேசரி வெள்ளி விழா மலரில் "ஈழத்து மணி விளக்குகள்" குறிப்புக்கோவை, ஈழகேசரியின் மற்றொரு மலரில் "ஈழத்துத் தமிழ் நாவல்கள்" கட்டுரை, ஒரு கவிஞரின் பாடல்களை ஆராய்ந்து "கவிதை வானில் ஒரு வளர்பிறை" துண்டுப் பிரசுரம், பண்டித மணியின் தமிழ்த் தொண்டு பற்றி "மூன்றாவது கண்" என்னும் நூலில் வந்தமை, திருகோணமலை எழுத்தாளர் சங்க மலரில் இலங்கையர்கோனை ஆராயும் கட்டுரை ஒன்று, ஒரு தினசரியிற் வீரசிங்கன், விஜயசீலம் ஆகிய நாவல்கள் பற்றித் தனிக்கட்டுரை, தினகரனில் "ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சி", "கவிதைக் கடலில் கதை முத்துக்கள்" எனும் தொடர் கட்டுரைகள் என்பனவற்றின் பிரதிபலிப்பே "ஈழத்து இலக்கிய வளர்ச்சி எனும் நூல் என்றால், அந்நூல் முன்னுக்குப்பின் எவ்விதம் முரண்படுகிறது என்பதை அப்பட்டமாகப் புட்டுக்காட்டவே. சில்லையூர் செல்வராசன் அப்போது எழுத ஆரம்பித்து முதலாவது கட்டுரை வெளிவந்துவிட்டது. அதன் பிறகுதான் பெரும் அதிர்ச்சி.

உடனே லேக்ஹவுஸ் நிறுவனத்தின் மேலிடத்திற்கு இக்கட்டுரையை நிறுத்துமாறும், அதற்கெதிராக ஏன் வழக்குத் தொடர முடியாது? என்றும் லெட்டர் ஒப் டிமாண்ட் - உரிமை கோரும் வழக்கறிஞர் அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுவிட்டது. நிறுவனம் இது பற்றிய நியாயம் கூற வேண்டிய அவசியமே இல்லை. தொடர்ந்து இக்கட்டுரையை வெளிவராமலாக்கி விட்டால் பிரச்சினைகளிலிருந்து மீளலாம் என்பதால், தினகரன் ஆசிரியருக்கு இத்தொடரை நிறுத்துமாறு அறிவித்தல் வந்துவிட்டது. ஆசிரியர் இக்கதையை சில்லையூர் செல்வராசனுக்கு அறிவித்து விட்டார். இவ்விடயம் என்னுடையதானால், இது பற்றி அலட்டிக் கொள்ளாது வெளியிடுவதற்கு வேறு வழி பார்த்திருப்பேன். ஆனால், செல்வராசன் சும்மா இருக்கவில்லை. 'லேக்ஹவுஸ்' மேலிடத்திற்குச் சென்று மோதினார். நியாயங்களை எடுத்துக் கூறினார். தனக்கு இதில் மான நஷ்டம் ஏற்படுவதாக விவாதித்தார். 'லேக்ஹவுஸ்' சட்டவல்லுனர்களை அணுகுமாறு வற்புறுத்தினார். அசையாத அவர்கள் அசைந்தனர். "இக்கட்டுரைத் தொடர் முழுதும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அதை நாங்கள் எங்கள் சட்ட வல்லுனர்களிடம் காட்டி முடிவெடுக்க வேண்டும்" என்ற இடத்திற்கு வந்துவிட்டார்கள். ஒருநாள் முழுதும் இருந்து தொடர் கட்டுரைகள் முழுவதையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து தட்டச்சு செய்து "கொப்பி றைட்டர்" காரியாலயத்திலிருந்து வெளியேறி 'லேக்ஹவுஸ்' சென்றார் செல்வராசன். அங்குள்ள சட்டவல்லுனர்களைச் சந்தித்தார். அவர்கள் மத்தியிலிருந்து அதை வாசித்துக் காட்டினார். அவர்களையும் வாசிக்க வைத்தார். அடுத்த வாரம் 1964 ஜுன் 14ஆந் திகதி தினகரன் ஞாயிறு வெளியீட்டில் கட்டுரைத் தொடர் வெளிவர வேண்டும் என்பதில் மிகவும் உன்னிப்பாக நின்றுழைத்தார். புதன் கிழமை பிற்பகல் லேக்ஹவுஸ் சட்ட வல்லுனர்கள் "இக்கட்டுரை பற்றி நீதிமன்றம் செல்ல அவசியமேற்படாது" என்ற முடிவை அறிவித்தனர். வியாழக்கிழமை ஞாயிறு தினகரன் அச்சேறும் பகுதியுடன் சில்லையூர் செல்வராசனின் இரண்டாவது கட்டுரை அச்சுக்குச் சென்றுவிட்டது. ஒரு பெரும் சவாலை வென்ற திருப்தியுடன் நிம்மதியாக இருநாட்களின் தூக்கத்தை நிறைவு செய்தார் சில்லையூர் செல்வராசன். 1964 ஜுன் 14ஆந் திகதி ஞாயிறு தினகரனில் "புலவர்கள் பண்டிதர்கள் பற்றி முன்னுக்குப்பின் முரணான குறிப்புக்கள்" எனும் கொட்டை எழுத்துத் தலைப்பில் சில்லையூர் செல்வராசனின் இரண்டாவது கட்டுரை வெளிவந்தது. அது வெளிவராது தடுத்து விட்டோம் என்று எண்ணியவர்கள் மிகவும் அசூசை மனத்துடன் ஆச்சர்யமாக அங்கலாய்த்தனர்.

தொடர்ந்து 1964 ஜுன் 21இல் "மறுமலர்ச்சிக் காலத்தைப் பற்றி மலரும் முரண்பாடான குறிப்புக்கள்", "ஜுன் 28 ஞாயிறு மலரில் "ஈழத்து இலக்கிய முயற்சிகள் பற்றி ஒன்றுக்கொன்று மாறான தகவல்கள்", 1964 ஜுலை 5இல் "ஈழத்து இலக்கிய முயற்சிகள் பற்றி ஆராய்ந்து எழுத வேண்டிய முறை" என்னும் பாரிய தலைப்புக்களில் மிக நீண்ட கட்டுரைத் தொடர்கள் வெளிவந்து முடிந்துவிட்டது. அக்கட்டுரைகள் தந்த தெளிவு கனகசெந்தி நாதனை மிக வருத்தத்தில் ஆழ்த்தி வதைத்த சங்கதிகள் அக்காலம் வெளிவந்தன.

கனக செந்திநாதனின் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" எனும் நூலைக் கற்கும் எவரும் சில்லையூர் செல்வராசனின் இம்மறுப்புக் கட்டுரைகளைப் படியாது விட்டால், நேர்மையான, உண்மையான ஈழத்து இலக்கிய வளர்ச்சியை அறிந்தவர்களாக மாட்டார்கள். எவ்வளவு உன்னிப்பாகப் படித்துணர்ந்து சில்லையூர் செல்வராசன் இக்கட்டுரைத் தொடரை எழுதியிருக்கின்றார் என்பதைப் படிப்பவர்கள், படித்தவர்கள் நன்குணர்வர். எவ்வளவு உன்னதமாக ஈழத்து இலக்கிய வளர்ச்சியைச் செல்வராசன் நுணுகிக் கணக்கிட்டுள்ளார் என்பதைப் பார்க்கும் போது, கனக செந்திநாதனின் பலவீனம் விளங்குகின்றது. உண்மையில் கனகசெந்திநாதன் இவ்விஷயத்தில் வஞ்சிக்கப்பட்டாரா? என்பது பெரும் கேள்விதான்: ஆம், வஞ்சிக்கப்பட்டார்.

1999 ஜனவரி 10ஆந் திகதி ஞாயிறு மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் யாழ் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் கனகசெந்திநாதனின் நினைவு தினத்தைப் பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜனின் "கனக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்திநாதனும் தமிழ் மரபு விமர்சனமும்" என்னும் நூலை வெளியிட்டுக் கொண்டாடினார். அவ்விழாவில் பிரதான பேச்சாளர் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கலாநிதி எம்.ஏ.நுஃமான் "இரசிகமணி கனகசெந்திநாதன் ஒரு சிறந்த எழுத்தாளரா? விமர்சகரா? என ஆய்வுகள் செய்து முடிவெடுக்க நெடுங்காலம் செல்லலாம். ஆனால், ஈழத்து இலக்கிய வளர்ச்சி அல்லது வரலாறு பற்றி எழுதும் போது அவரின் பெயரைக் குறிப்பிடாமல் எந்தவொரு நூலையும் எழுதிவிட முடியாது" என்றார்.

"ஈழகேசரியில் கரவையூர் கந்தப்பனார் என்ற புனைபெயரில் ஈழத்துப் பேனா மன்னர்கள் என்ற பந்தியில் பல எழுத்தாளர்களை ஈழத்து இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் இரசிகமணி கனகசெந்திநாதன். "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" என்ற அவரது நூல் ஒருசில எழுத்தாளர்களின் கண்டனத்துக்குள்ளானது உண்மையே. அதற்கு, அவருடன் உறவாடித்திரிந்த இன்னொரு பிரபல எழுத்தாளரின் தில்லுமுல்லு வேலைதான் காரணம் என்று அவரே கவலை தெரிவித்திருந்தாரென நாம் அறிகிறோம்" என்ற செய்தியையும் பேராசிரியர் கலாநிதி நுஃமான் அவர்கள் அச்சபையில் வெளியிட்டார். அந்நூல் வெளியான 1964 களில் நுஃமான் அவர்கள் அக்கூட்டில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்பு, இக்கூட்டின் அசத்திய நிலையை உத்தேசித்து வெளியானவர் என்பதும் குறிப்பிடத்தக்கதே:

இவ்வளவு முக்கியமான, பொறுப்பான, கவனத்தில் எடுக்க வேண்டிய விடயத்தையே கவனத்தில் எடுக்காது மீண்டும் அந்நூல், "மித்ரா" வெளியீடாக 2000 டிசம்பர் 24இல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்திருக்கின்றதென்றால் தமிழ் இலக்கியவாதிகளை இன்னும் முட்டாள்களாக்கலாம் எனும் திமிர் தெரிகிறதல்லவா?


இவ்வளவும் தெரிந்திருந்தும் "ஈழத்தில் தமிழ் இலக்கியம்" நூல் எழுதிய டாக்டர் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் அந்நூலின் ஆறாம் பக்கம் இரண்டாம் பந்தியில் "முதலாவது அத்தியாயமான "ஈழத்தின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கட்டங்கள் - 1948 வரை" எனும் பகுதி ஈழத்து இலக்கியத்தின் தேசியப் பரிமாணத்தை எடுத்துக்காட்டும் முறையிலேயே எழுதப்பெற்றுள்ளது. எனவே, ஈழத்திலக்கிய வளர்ச்சி பற்றிய சகல தகவல்களையும் அதனுள் எதிர்பார்ப்பது தவறாகும். அத்தகைய தகவல்கள் வேண்டுவோர் கலாநிதி பொ.பூலோலசிங்கத்தின் "ஈழத்திலக்கிய அறிஞர்களின் பெருமுயற்சிகள்" எனும் நூலையும் கனக செந்திநாதனின் "ஈழத்திலக்கிய வரலாற்று நூலையும் வாசித்தல் வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார். இதில் கனகசெந்திநாதனின் நூலை ஏன் வாசிக்க வேண்டும்? என்பது புரியவில்லை. சில்லையூர் செல்வராசனின் கட்டுரையை மிக உன்னிப்பாக படித்தவர்களுள் டாக்டர் சிவத்தம்பியும் ஒருவர். அப்படியிருந்தும் ஏன் இப்படி எழுதினார்? பேராசிரியர்களும் முன்னுக்குப் பின் முரணானவர்களா? என எண்ணத்தோன்றுகின்றதல்லவா?


இரசிகமணி கனகசெந்திநாதனின் "ஈழத்து இலக்கிய வளர்ச்சி" முதலாம் பதிப்பின் இறுதியில், நான் சில்லையூர் செல்வராசனின் கட்டுரையை ஒட்டி



அழகாக பைண்ட் செய்துள்ளேன். அந்நூலை ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் நோக்குடன் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் 1996 பெப்ரவரி 9ஆம் திகதி மஹரகம தேசிய கல்வி நிலையத்தில் வைத்து என்னிடமிருந்து வாங்கிச் சென்றார். எட்டு வருடங்கள் ஆகிவிட்டன. இன்னும் என்கைக்கு அது கைமாறவில்லை. தமிழ் இலக்கிய உலகம், தமிழ் வரலாறு கற்கும் மாணவனுக்கு - ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு கற்கும் மாணவனுக்குச் செய்யும் பேருதவி செல்வராசனின் அக்கட்டுரையை நூலுருவாக்கி வெளியிடுவதாகும்.

— தொடரும்





## வாழ்த்துக்கள்

கொழும்புத் தமிழ்ச்சங்க முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினரும் துணைத் தலைவருமான திரு.டபிள்யூ.எஸ்.செந்தில்நாதன், மற்றும் சங்க உறுப்பினரும் தற்போது சங்கத்தில் தமிழ்ப்புலவர் வரிசையில் தொடர் சொற்பொழிவு ஆற்றுபவருமான பண்டிதர் சி.அப்புத்துரை ஆகியோர் 04.02.04 அன்று கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெற்ற விழாவில் இலங்கை அரச - கலாசார அமைச்சினால் கலாபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அவர்களைக் கொழும்புத் தமிழ்ச்சங்கமும் "ஓலை"யும் வாழ்த்துகின்றது.

## அஞ்சலி


கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகச் செயலாளர் திரு.தி.கணேசராஜா அவர்களின் சகோதரி திருமதி.ராதா சிவசுப்பிரமணியம் அவர்கள் 27.02.04 அன்று யாழ்ப்பாணம், கட்டுடையில் காலமானார். அன்னாருக்கு ஓலை தனது அஞ்சலியைச் செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தன் நறுக்குகள் 3

### அறுவடை




திரைப்படச்
சுவரொட்டியை

தின்ற கழுதை
கொழுத்தது.

பார்த்த கழுதை
புழுத்தது

### புரட்சி



மாடியில் இருந்து
துப்பினால்
குடிசையில்
விழும்.

குடிசையில் நின்று
துப்பினால்
மாடியே
விழும்.

### கண்ணோட்டம்

செருப்பைப்
பார்க்கையில்

நீங்கள்
அணிந்திருக்கிறவனின்
காலைப்
பார்க்கிறீர்கள்.

நான்
செய்தவனின்
கையைப்
பார்க்கிறேன்.



### மாடு

ஆயிரம்
ஆயிரம்
ஆண்டுகள்

வண்டி
இழுக்கிறது....

கொம்பை
மறந்த
மாடு:



### மந்தை



மேடை

'தமிழா!
ஆடாய்
மாடாய்
ஆனாயடா...
நீ
என்றேன்.

கை
தட்டினான்.

### விளம்பரம்

விளம்பரம்.

குளிப்பாட்டி
அழுக்காக்குகிறான்
பெண்ணை...

தொலைக்காட்சியில்



### கொலு

தங்க வாளும்
வெள்ளி வாளுமே

மேடைகளில்
தரப்படுவதால்

நாங்கள்
போராடுவதில்லை.



### தாயகம்

வளமுண்டா
உன்
மண்ணில்?
வாழ்வாயா
தனித்து?
என்கிறாய்..



என்
நாட்டின்
துயரங்கள்
பற்றி
என்னிடம்
பேசாதே.

பாலைவனத்தின்
இனிமை
பற்றி
ஒட்டகத்திடம்
கேள்.

— இன்னும் வரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழறிவோம்**

# 3. கற்கண்டு - CANDY

'கற்கண்டு', 'நூற்கண்டு' நாம் நாளும் சொல்லும் சொல். இவற்றோடு உறவுடையவையே 'உப்புக்கண்டம்', 'தயிர்க்கண்டம்' என்பனவும். இந்தக்கண்டு - கண்டம் என்னும் சொற்களுக்கு உருண்டு திரண்டது என்பதே மூலப்பொருள். சீனிப்பாகு உருகி இறுகிக்கல்லானது. நூல் தனித்தனி இழையாக இருந்தது பந்தாகச் சுற்றப்பட்டு உருண்டையானது. இது நூற்கண்டு எனப் பெயர் பெற்றது. துண்டு துண்டாக வெட்டப்பட்ட இறைச்சியில் உப்பினைச் சேர்த்துக் காயவைத்து எடுத்துக் கொள்கிறோம். இது உப்புக்கண்டம். தண்ணீர்போல் இருந்த பால் பிரை குற்றியவுடன் கட்டித்தயிரானது, இதுவே தயிர்க்கண்டம்.

ஒன்றோடு ஒன்றாய் இறுகிச் சேர்ந்த பொருள் தனிப்பொருளாகத் தனித்தனி பகுதியாக வேறொன்றிலிருந்து பிரிந்துவிடும். இதன் வழியாகத்தான் இந்த மண்ணுலகில் தனியாகப் பிரிந்திருக்கும் நாட்டுப் பகுதிகள் இந்தியத் துணைக் கண்டம், ஐரோப்பாக் கண்டம், அமெரிக்காக் கண்டம், ஆப்பிரிக்கக்கண்டம், ஆத்திரேலியக் கண்டம் எனக் கண்டப் பெயரால் அழைக்கப்படுகின்றன.

ஒரு நூலில் அமைந்த தனித்தனி உட்பிரிவுகள் கூட இந்த வகையில்தான் கண்டம் - காண்டம் எனப்பட்டதாம்.

கரும்பைச் சாறுபிழிந்து வெல்லம் செய்கிறோம். இந்த வெல்லப்பாகு இறுகியதும் சருக்கரைக்கட்டி என்று பெயர் பெறுகிறது. இந்தச் சருக்கரைக் கட்டி உருண்டு திரண்டிருப்பதால் 'சருக்கரைக் கண்டி' என்றும் வழங்கப் பெறுகிறது. கண்டமாய் இருப்பது கண்டியாகும். அதாவது உருண்டு திரண்டிருப்பது என்பது இதற்குப் பொருள்.

தமிழில் தோன்றிய இந்த 'சருக்கரைக்கண்டி' என்னும் பொருள் ஆங்கிலத்தில் 'candy' என்று அப்படியே அழைக்கப்படுகிறது. பிரெஞ்சு, இத்தாலி, பெர்சிய, அரபு என்று மேலை மொழிகள் பலவற்றிலும் சருக்கரைக்கட்டி 'sugar candy, succhero candy' என்பனவாகச் சொல்லப்பட்டு வருகின்றன.


இனிப்பான இந்தக் கண்டிச் சொல்லில் கசப்பான உண்மை, ஒன்றிருப்பது என்னவென்றால் மாமேதை கீற்று போன்றோர் கூட இச்சொல்லின் மூலமறியாமல் கூறியிருப்பதுதான்.

candy - *to crystallise;* **(F., Ital., Pers.) F.** se candir, - *'to candie';* **Cot.Ital.** candire - *to candy;* **Ital.** candi - *candy;* zuccero candi - sugar - candy; **Pers.** and **Arab.** qund, *sugar - candy;* whence; **Arab.** qundi. - made of sugar. The word is Aryan **(Pers)**; of. **Skt.** khandava - *sweetmeats;* khanda - *a broken piece.*

— இன்னும் அறிவோம்

நன்றி : 'தமிழறிவோம்' - முனைவர் கு அரசேந்திரன்





# மாஸ்ரர் சிவலிங்கம்

**மாஸ்ரர் சிவலிங்கம் அவர்கள் (ஆர். இரத்தினம் சிவலிங்கம்) இலங்கையில் வில்லுப்பாட்டுக் கலையை அறிமுகம் செய்தவர். ஈழத்தில் வில்லிசையின் பிதாமகன் அவரே. கதை சொல்லும் கலை இவருக்குக் கைவந்த கலை. சுமார் பதினெட்டு ஆண்டுகள் மட்டக் களப்பு மாநகரசபை பொதுநூல் நிலையத்தில் கதை சொல்லும் கலைஞனாகப் பணியாற்றிக் கடந்த வருடமே ஓய்வு பெற்றார்.**

மாஸ்ரர் சிவலிங்கம் அவர்கள் மட்டக்களப்பில் மஞ்சந்தொடுவாய் எனும் கிராமத்தில் 28.03.1933 அன்று பிறந்தார். தந்தையார் திரு.ந.இரத்தினம் ஆசிரியர். தாயார் திருமதி செல்லத்தங்கம். மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்திலும் மஞ்சந்தொடுவாய் சென்மேரிஸ் பாடசாலையில் கல்வியைத் தொடங்கி (1ம், 2ம் வகுப்புகள்) பின் கல்லடி உப்போடை இராமகிருஷ்ணமிஷன் மகளிர் பாடசாலையில் 3ம், 4ம், 5ம் வகுப்புக்களைக் கற்றார். தொடர்ந்து மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்தியாலத்திலும் (6ம், 7ம் வகுப்புகள் 1946 / 47) பின் மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலும் (தற்போது இந்துக்கல்லூரி - 1948/ 52) கல்வி கற்றார். புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர் வி.சி.கந்தையா ஆகியோர் இவரது ஆசான்களாக விளங்கினர். பள்ளிப்பருவத்திலேயே நல்ல 'பகிடி'கள் சொல்லி மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் நன்கு அறியப்பட்டவராக இருந்தார். பள்ளிப்படிப்பை முடித்துக் கொண்டு 'கார்ட்டுன்' சித்திரத்துறையில் பயிற்சி பெறுவதற்காக தமிழகம் (தமிழ்நாடு சந்தனக் கலைக்கல்லூரி) சென்றார். அங்கே கவின் கலைகளில் அதிகம் நாட்டம் கொண்டார். ஓவியம், வில்லிசை ஆகியவற்றில் பயிற்சி பெற்றார். நடிப்பு, நகைச்சுவை, கதைப்பிரசங்கம், பல குரல்களில் பேசுதல் (Mimicry), வில்லுப்பாட்டு, போலச் செய்தல் (Imitation) போன்ற கலைகள் அவரை ஈர்த்தன. அங்கு திரைப்படத்தில் நடிக்க அவர் ஒப்பந்தமாகி சில காட்சிகளும் படமாக்கப்பட்டிருந்த வேளையில் அவரது வீட்டாருக்கு அது விருப்பமில்லாத காரணத்தால் 'அம்மாவுக்கு சுகமில்லை' என்று செய்தி கொடுத்து அவரை இலங்கைக்கு வரவழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விட்டனர். 1960 இல் அவர் தமிழகத்திலிருந்து இலங்கை திரும்பினார்.

தமிழகத்திலிருந்த போது கொத்த மங்கலம் சுப்பு, கலைவாணர், என்.எஸ்.கிருஸ்ணன் மற்றும் பலருடைய வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளை நேரில் கண்டும் கேட்டும் உணர்ந்த சிவலிங்கம் அவர்கள் அதனை இலங்கையிலும் அறிமுகம் செய்ய அவாக் கொண்டார். ஆம்! 1960 களில் வில்லுப்பாட்டுக் கலையை இலங்கையில் முதலில் அறிமுகம் செய்தவர் இவரேயாவார். இவரது முதலாவது வில்லுப்பாட்டு நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் "நமக்கும் மேலே ஒருவனடா" என்ற தலைப்பில் நடைபெற்றது. தனது வில்லுப் பாட்டுக் குழுவில் கவிஞர். செ.குணரெத்தினம், சித்தாண்டி சிவலிங்கம், கிருபைரெட்ணம் ஆசிரியர், முழக்கம் முருகப்பா, அன்புமணி இரா.நாகலிங்கம், வி.கந்தசாமி ஆகியோரைச் சேர்த்துக் கொண்டு இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று நிகழ்ச்சிகளை நடாத்திப் புகழ் பெற்றார். மிகக் குறுகிய காலத்தில் நூறு நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன. நூறாவது நிகழ்ச்சி மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. அதன்பின் பாடசாலை மாணவ மாணவியருக்கு அக்கலையைப் பயிற்றுவிக்கத் தொடங்கினார். பாடசாலை மாணவனாக இருக்கும் போதே அவருடைய பெயருடன் ஒட்டிக் கொண்ட 'மாஸ்ரர்' பட்டம் நிரந்தரமாகிற்று. பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை அவர்களின் புதல்வியார் மங்கையற்கரசி அவர்களே இவரது வாழ்க்கைத்துணை. காலஞ்சென்ற எஸ்.டி.சிவநாயகம் அவர்களே இவரது இலக்கியத்துறை வழிகாட்டி. 1966ம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டு எஸ்.டி.சிவநாயம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த தினபதி (தினசரி), சிந்தாமணி (வாரமலர்) ஆகிய பத்திரிகைகளில் அவை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பணி புரிந்தார். இப்பத்திரிகைகளின் 'சிறுவர் பகுதி'க்கு இவரே பொறுப்பேற்றிருந்தார். இப்பத்திரிகைகளில் ஆசிரியபீடத்தில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்த சுமார் பதினேழு ஆண்டுகள் சிறுவர் இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய பங்களிப்பு பாரியது. 1983 ஆடிக் கலவரத்தில் பாதிக்கப்பட்டுக் குடும்பத்தினருடன் கொழும்பிலிருந்து வெறுங்கையுடன் மட்டக்களப்பு மீண்டார்.

மட்டக்களப்புக்குத் திரும்பிவந்த மாஸ்ரர் சிவலிங்கத்தை மட்டக்களப்பு மாநகர சபை அதனால் நிர்வகிக்கப்பட்டு வந்த பொது நூல்நிலையத்தில் கதை சொல்லும் கலைஞனாகப் (Story narrator) பதவியிலமர்த்தியது. இப்பதவி இவருக்கென்றே இவரது திறமையை மதித்து புதிதாக உருவாக்கப்பட்டதொன்றாகும்.



மட்டக்களப்பு மாநகரசபையின் கீழ் இயங்கும் மூன்று நூலகங்களுக்கும் சென்று கதை சொல்வார். மேல்நாடுகளில் கதை சொல்லுதல் ஒரு கலையாககே வளர்ந்துள்ளது. பாடசாலைச் சிறுவர்கள் இவரது கதை சொல்லலில் நல்ல பயன் பெற்றனர். சிறுவர்களுக்கு மகாபாரதம், இராமாயணம் கதைகளை 1984 இல் தொடங்கிச் தொடர்ச்சியாகச் சொல்லி வந்தார். வானொலி, தொலைக்காட்சி (ரூபவாகினி - வண்ணச்சோலை) ஆகிய ஊடகங்களிலும் சிறுவர் நிகழ்ச்சிகளை வழங்கினார். இவர் கதை சொல்லும் பாணி மிகவும் கவரக்கூடியது. நகைச்சுவை, நடிப்பு கலந்து கதைசொல்லும் போது கதாபாத்திரமாகவே மாறிவிடும் தன்மையா. மகாபாரதக் கதை சொல்லும் போது துரியோதனனின் ஆணவச் சிரிப்பையும் சகுனியின் வஞ்சகச் சிரிப்பையும் நடித்துக் காட்டுவார். சிறுவர்களுக்குக் கதை சொல்லும் போது கிழவி போல் நடந்தும், சிறுவன் போல் ஓடியும், குரங்கு போல் பாய்ந்தும், யானை போல் பிளிறியும், முயல்போல் துள்ளியும், மான் போல் வெருண்டும், பாம்பு போல் நெளிந்தும் சீறியும் இப்படி அந்தந்தப் பாத்திரங்களாகவே மாற பல்வகை நடிப்புக்களையும் தனிநபர் அரங்கிலே சிறப்பாகச் செய்வார். மாஸ்ரர் சிவலிங்கம் கதை சொல்ல வருகிறார் என்றால் மட்டக்களப்பிலே சிறுவர்களுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியாது. மட்டக்களப்பிலலே இவரது சேவையைப் பெற்றுக் கொண்ட பாடசாலைகள், பாலர் கல்வி நிறுவனங்கள், சன சமூக நிலையங்கள் பல. மட்டக்களப்பு மாநகரசபை பொது நூல் நிலையத்தில் கதை சொல்லும் கலைஞனாக 1984 செப்டம்பர் 15ந் திகதி கடமையேற்ற மாஸ்ரர் சிவலிங்கம் அவர்கள் 2003 மார்ச் 31ந் திகதி ஓய்வு பெற்றார்.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தொடர்ந்து இடம்பெற்றுவரும் இவரது சிறுவர்க்கான கதைகூறல் நிகழ்ச்சியானது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. ஈழத்து - தமிழகத்துப் பத்திரிகைகளில் அவரது நகைச்சுவை ஆக்கங்கள் நிறைய வெளிவந்துள்ளன. 1993இல் உதயம் வெளியீடாக வெளிவந்த இவரது 'பயங்கர இரவு' சிறுவர்க்கான தரமான இலக்கியப்படைப்பாகும். 1994 இல் ராஜா புத்தக நிலையம் வெளியிட்ட 'அன்பு தந்த பரிசு' நூல் வடகிழக்கு மாகாண சாகித்திய பரிசு பெற்றது. 1994 இல் மட்டக்களப்பிலே மாஸ்ரர் சிவலிங்கம் மணிவிழாச் சபை 'மாஸ்ரர் சிவலிங்கம் மணிவிழா மலர்' வெளியிட்டு விழாவெடுத்து இவரைக் கௌரவித்தது.



இங்கிலாந்தில் இயங்கும் 'Buds' அமைப்பு (Batticaloa Underprivileged Development Society) தனது 10வது ஆண்டு விழாவையொட்டியதாக 'விபுலானந்த கலைவிழா'வை 19.07.97 அன்று நடாத்திய போது அதில் மாஸ்ரர் சிவலிங்கம் அவர்களும் பிரதம விருந்தினராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலந்து சிறப்பித்தார். அவ்விழாவில் 'விண்ணுலகில் விபுலானந்தர்' எனும் தலைப்பில் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியையும் அளித்தார். இதுவே அவர் இறுதியாக அளித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சி. இது அவரது 127 வது வில்லுப்பாட்டு ஆகும். லண்டன் சென்றிருந்த போது மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவுநாள், லண்டன் ஈஸ்ட்காம் முருகன் ஆலய வைபவம், லண்டன் துர்க்கை அம்மன் ஆலய நிகழ்ச்சி ஆகியவற்றிலும் கலந்து கொண்டார். லண்டன் 'Surv rise' வானொலியிலும் இவரின் சிறப்புரை இடம் பெற்றது. 'Buds' இவருக்கு லண்டனில் 'கதைமாமணி' பட்டம் அளித்துச் சங்கை செய்தது.

இலங்கை கலாசார அமைச்சின் 'கலாபூஷண விருது 1999' பெற்றார். 10.10.2002 அன்று நடைபெற்ற கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாவில் கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கியக் கலாநிதிப் பட்டம்-Degree of Master of letters (Honoris Causa) - Presented by the Deon, Faculty of Arts & Culture) வழங்கியது. நகைச்சுவை குமரன் (புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை வழங்கியது) நகைச்சுவை மன்னன் (FXC நடராஜா வழங்கியது). வில்லிசைக் குமரன் (பண்டிதர் V.C.கந்தையா வழங்கியது). வில்லிசைச் செல்வர் (1987) வடகிழக்கு மாநகர சபை , பல்கலைக்கலைஞன் கனிதமிழ்க்கலைஞன் (காத்தான்குடி நல இலக்கிய மன்றம்) கதை வள்ளல், கதைக் கொண்டல், கலைஞானமணி கலைக்குரிசில் அருட்கலைத்திலகம் வடகிழக்கு மாகாணசபை (1993( கதை மாமணி (லண்டன் - 1997) கலாபூஷணம் (1999), ஆளுநர் விருது (வடகிழக்கு மாகாணம் -2000) இலக்கிய கலாநிதிப்பட்டம் (கிழக்குப் பல்கலைக்கழகம் -2002) ஆகிய பட்டங்களையும் விருதுகளையும் பெற்றிருந்தாலும் இவை அனைத்துக்கும் மேலாக 'மாஸ்ரர்' என்னும் மகுடமே மக்கள் மனதை நிறைத்து நிற்கிறது.

1970 மட்டக்களப்பில் பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை அவர்களின் மூத்த புதல்வி மங்கையர்க்கரசி அவர்களை மணம் புரிந்தார். மனைவி ஆங்கில







ஆசிரியை. ஒரேமகன் விவேகானந்தன் டாக்டராவார்.

சிந்தாமணி வாரவெளியீட்டில் சிறுவர்களுக்காக இவர் எழுதிய கதைகள் சிலவற்றை கொழும்பு அஷ்டலஷ்மி பதிப்பகம் (320, செட்டியார் தெரு, கொழும்பு - 11 தொலைபேசி : 2334004) 'சிறுவர் கதை மலர்' எனும் தலைப்பில் நூலாக (1ம், 2ம் தொகுப்புக்களை அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

தற்போது மட்டக்களப்பில் இராமகிருஷ்ண மிஸன் மாணவர் இல்லம், சாரதா மகளிர் இல்லம், தரிசனம், மங்கையற்கரசி மகளிர் இல்லம், மெதடிஸ்த மகளிர் இல்லம் முதலியவற்றில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு வில்லுப்பாட்டு, தாளலயம், நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளை எழுதிப் பயிற்றுவித்து வருகிறார். அத்துடன் அறநெறிப் பாடசாலைகளில் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகளைக் கூறி வருகிறார்.





இம்மாதம் (28.03.2004) எழுபத்தியோராவது அகவையை நிறைவு செய்யும் மாஸ்ரர் சிவலிங்கம் அவர்கள் நோய் நொடியின்றி நூறாண்டு காலம் வாழ்ந்து பணிசெய்ய 'ஓலை' மூலம் வாழ்த்துகிறோம்.

— செங்கதிரோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கப்பலகை

## இசை நிகழ்ச்சி

01.02.04 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்குக் கொழும்புத் தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் துணைத்தலைவர் திரு.மு.கதிர்காமநாதன் தலைமையில் திருமதி.சுலோசனா தேவி பாலசுப்பிரமணியம் அவர்களால் தமிழிசைக் கீர்த்தனைகள் இசைக்கப் பெற்றன.

இந்நிகழ்வில் அணி செய் கலைஞர்களாகப் பங்கு பற்றியோர்.

| | | |
|---|---|---|
| வயலின் | - | திரு.எஸ்.திபாகரன் |
| மிருதங்கம் | - | திரு.பி.பிரம்மநாயகம் |
| புல்லாங்குழல் | - | திரு.கே.சிவபாலரட்ணம் |
| கஞ்சிரா | - | திரு.மெற்றாஸ் கஜன் |

## ஒரே ஒரு நிமிடம்

கொழும்புத் தமிழ்ச்சங்க அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 07.02.04 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு பேச்சுக் கலைக்கான நிகழச்சித் தொடரான 'ஒரே ஒரு நிமிடம்' தூயதமிழ் பேசும் நிகழ்ச்சி ஒலிப்பதிவானது. கொழும்புத் தமிழ்ச்சங்கச் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு.பெ.விஜயரெட்னம் அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக திரு.மயில்வாகனம் சர்வானந்தா (பணிப்பாளர் சபை உறுப்பினர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) கலாசூரி திருமதி.அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் (ஆலோசகர் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) திரு.வீ.ஏ.திருஞானசுந்தரம் (ஐ.ரி.என்) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஒரே ஒரு நிமிடம் ஒலிப்பதிவு நிகழ்ச்சியில் பார்வையாளர் பலர் பங்கு பற்றிச் சிறப்பித்தனர். நிகழ்ச்சித் தயாரிப்பாளராக திரு.இராஜபுத்திரன் யோகராஜன் அவர்களும் நிகழ்ச்சித் தொகுப்பாளராக திரு.இளையதம்பி தயானந்தா அவர்களும் கடமையாற்றினர். இலங்கை வானொலிக் கலைஞர்களது 'சிரிப்பலைகள்' நகைச்சுவை நிகழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கட்டுப்பாட்டாளர் திரு.ரி.உருத்திராபதி அவர்கள் நன்றியுரை கூறினார்.



## நினைவுப் பேருரை

கொழும்புத் தமிழ்ச்சங்க முன்னாள் தலைவர் அமரர் .பொ.சங்கரப்பிள்ளை அவர்களது நினைவாக 23.02.04 திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்குச் சங்கத் தலைவர் திரு.பெ.விஜயரட்னம்அவர்கள் தலைமையில் சுவாமி ஆத்மகணானந்தஜி அவர்களால் (இராமகிருஸ்ன மிசன்) சுவாமி விவேகானந்தரின் ஆளுமை" என்ற பொருளில் நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வின் வரவேற்புரையை திரு.வெ.சபாநாயகம் (ஆட்சிக்குழு உறுப்பினர்) அவர்களும் நன்றியுரையை திரு.ஆ.கந்தசாமி (பொதுச்செயலாளர்) அவர்களும் நிகழ்த்தினார்கள்.

## உறுப்பினர் ஒன்றுகூடல்

25.02.04 புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு.பெ.விஜயரத்தினம் தலைமையில் சங்கத்தின் உறுப்பினர்களுக்கிடையிலான ஓர் ஒன்றுகூடல் நிகழ்வு இடம் பெற்றது. இதன்போது உறுப்பினர்கள் அறிமுகமும் சங்க அபிவிருத்திக்கான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

## சுகாதாரக் கருத்தரங்கு

29.02.04 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குத் கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சங்கதத் தலைவர் திரு.பெ.விஜயரத்தினம் தலைமையில் 'ஆரோக்கியத்தில் உணவின் பங்கு' என்ற பொருளில் சுகாதாரக் கருத்தரங்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பின்வரும் பொருளில் உரை நிகழ்த்தப்பட்டது.

| | |
|---|---|
| கருத்தரங்கின் நோக்கம் | திருமதி.அ.புவனேஸ்வரி (துணைப்பொதுச்செயலாளர்) |
| ஆரோக்கியத்தில் உணவின் பங்கு - | திருமதி.ரி.விநாயகமூர்த்தி |
| உணவுப் பழக்கவழக்கம் | கா.வைத்தீஸ்வரன் (நிதிச் செயலாளர்) |

இதனைத் தொடர்ந்து நிகழ்வில் பங்கு பற்றியோரது உடற் பருமன் கணிப்பீடு செய்யப்பட்டு உடல் ஆரோக்கியம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவோர் ஒன்று கூடல் - இலக்கியச் சொற்பொழிவு

| திகதி | விடயம் | நிகழ்த்தியவர் |
|---|---|---|
| 11.02.2004 (239) | செங்குட்டுவனாற் சமைத்த கண்ணகிகோட்டம் | புராணவித்தகர் மு.தியாராசா |

## நூல்நயம் காண்போம்....

***05.05.2000இல் ஆரம்பித்து பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 5.30மணிக்கு நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியில் இலங்கை எழுத்தாளர்களது நூல்கள் நயம் காணலுக்காக எடுத்தாளப்படுகின்றன.***

| திகதி | நூலின் பெயர் | நிகழ்த்துபவர் |
|---|---|---|
| 06.02.2004 (124) | தமிழ் பண்பாடு (சொற்பொழிவு) | பேரறிஞர் வைத்திய கலாநிதி கே.பாலசுப்பிரமணியம் |
| 13.02.2004 (125) | வெள்ளிப்பாதசரம் (இலங்கையர் கோனின் சிறுகதைத் தொகுதி) | மடுளு கிரி விஜயரட்ணம் |
| 20.02.04 (126) | நெஞ்ச நெருடல் (இணுவை சக்திதாசனின் கவிதைத் தொகுதி) | பொ.கோபிநாத் |
| 27.02.2004 (127) | தமிழ்ப்புலவர் வரிசை -II (சொற்பொழிவு) | பண்டிதர் சி.அப்புத்துரை |

**சங்கப்பலகை தயாரிப்பு :**
***சி.சரவணபவன் (ஆட்சிக்குழு உறுப்பினர்)***



சிறப்புக் கட்டுரை

# வில்லிசையின் மாண்பு

***மாஸ்டர் சிவலிங்கம்***

மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழ் மக்களிடையே - குறிப்பாகவும் சிறப்பாகவும் கிராமப் புறமக்களிடையே கிராமியக் கலைகள் பல வழங்கி வருகின்றன. தற்கால நாகரிகத்தின் தாக்குதலால் கிராமியக் கலைகள் சில மங்கி மறைந்து விட்டன. மற்றும் சில கிராமியக் கலைகள் மறையும் நிலையில் உள்ளன. ஆனால் பழம்பெரும் தமிழ்க் கலைகள் சில, நாகரிகத்துக்கு ஈடு-கொடுத்து மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து நீடித்து நிலவுகின்றன. அத்தகைய மகத்துவம் மிக்க கலைகளில் ஒன்றுதான் வில்லுப்பாட்டுக் கலை.

வில்லுப்பாட்டுக் கலையின் மாண்பு பற்றிக் கூறவந்த பேரறிஞர் ஒருவர், "வில்லுப்பாட்டுக் கலை அற்புத சக்தி படைத்தது. அக்கலையின் நல்லியல்பு-களிலும் இசை இன்பத்திலும் உள்ளத்தைப் பறிகொடுத்தனர் தமிழ் மக்கள். எளிமையும் யாவரையும் ஈர்க்கும் இனிமையும் கொண்ட கிராமியக் கலையான வில்லிசை தமிழ்க்கலைச் செல்வத்தின் அழியாத சின்னமாகத் திகழ்கிறது....." என்று விதந்து குறிப்பிட்டுள்ளார்.

வில்லுப்பாட்டு என்பதை வில்பாட்டு, விற்பாட்டு, வில்லடி, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு, வில்லிசை என்றெல்லாம் அழைப்பர்.

'வில்' என்ற கருவியை முதன்மைக் கருவியாக - முக்கிய கருவியாகக் கொண்டு இந்த இசைக்கலை அமைந்துள்ளதால் இக்கலை வில்லிசை, வில்லுப்பாட்டுக் கலை என அழைக்கப்படலாயிற்று.

வில்லுப்பாட்டுக்கு வில், குடம், உடுக்கு, தாளம் (சல்லாரி), சப்பளாக்கட்டை, மிருதங்கம் அல்லது தபேலா, டோல் போன்ற ஏதாவதொரு தோல் வாத்தியக் கருவி ஆகியன அவசியமாகும். சிலர் 'ஹார்மோனியம்' இசைக்கருவியையும் இணைத்துக் கொள்வர்.

வில்லுப்பாட்டுக் கலையிலே வில்லுக்கு அடுத்து சிறப்பான கருவிகளாக அமைவன குடமும் உடுக்குமாகும். வில்லின் இடது புறத்திலே குடம் கட்டப்பட்-டிருக்கும். குடத்தின் வாய்ப்புறத்திலே தடித்த கடதாசி மட்டையால் வில்லி-சைக்கு ஏற்ப தட்ட வேண்டும். உடுக்கும் மற்றைய வாத்தியக் கருவிகளும் அதற்கு உறுதுணையாக விளங்கும்.

வில் சுமார் பத்து அடி நீளம் உடையதாக அமைந்திருக்கும். வில் கட்டுவதற்கு நன்கு சீவப்பட்ட பனைமரத்துண்டு, மூங்கில், மலைப்பிரம்பு, பூவரசங்கம்பு முதலியன பயன்படுத்தப்படும். அதன் நாண் வலுவான கயிற்றினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்படும். தமிழகத்தில் வில்லின் நாணை சிலர் மாட்டுத்தோல் முறுக்காலும் கட்டுவதுண்டு. வில்லுத் தடியில் துணி சுற்றி வர்ணக்கடதாசிகளால் அழகூட்டப்படும். வில் தடியில் பெரிய மணிகளும் வில் நாணில் சிறிய மணிகளும் கட்டப்படும்

வில்லில் அடிக்கும் தடிகள் வீசு கோல்கள் என அழைக்கப்படும். அவை சுமார் ஓரடி நீளமுடையவை. வில்லடிக் கலைஞன் (குழுத்தலைவர்) பாட்டின் தாளத்துக்கு ஏற்பவில்லின் நாணிலே வீசுகோல்களால் தட்டிக் கொண்டே பாடுவார். அதற்கு ஏற்ப வாத்தியங்கள் இனிமையாக ஒலிக்கும். குழுவினர் பிற்பாட்டுப் பாடுவர்.

குழுத்தலைவர் பாடும்போது வாத்தியக் கருவிகள் மெல்லென ஒலிக்கும். குழுவினர் பிற்பாட்டுப் பாடும் போது வாத்தியக்கருவிகள் உரத்து - பலமாக ஒலிக்கும். குழுத்தலைவர் பாடல்களுக்கு இடையே வசனம் பேசும்போது குழுவைச் சேர்ந்த ஒருவர் அல்லது இருவர் இடையிடையே "ஆஹா! ஓகோ...! ஆமா...! அப்படியா? அடடே...! சரி...!" என்பன போன்ற சொற்களை இடத்திற்குத் தகுந்த படி கூறி நிகழ்ச்சியைச் சிறப்படையச் செய்வர்.

எந்த நிகழ்ச்சியை ஆரம்பிப்பதானாலும் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பிப்பது தமிழர்களின் பாரம்பரிய வழக்கமாகும். அதற்கு ஒப்ப வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இறை வணக்கத்துடனேயே ஆரம்பிக்கப்படும்.

"தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில்பாட, வில்லினில்பாட - வரம்
தந்தருள வேண்டும் அறிவான தெய்வமே"

என்று சிலர் நிகழ்ச்சியை ஆரம்பிப்பர். மற்றும் சிலர் பின்வருமாறு ஆரம்பிப்பர்:-

"தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லினில்பாட, வில்லினில்பாட - வரம்
தந்தருள்வாய் கணபதியே"

சிலர் "கணபதியே" என்ற சொல்லுக்குப் பதிலாக "கலைமகளே" என்ற சொல்லைப் பயன்படுத்துவதுமுண்டு.

வில்லுப்பாட்டை அதன் கதைப்பொருளின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. புராணம் தொடர்பான தெய்வீகக் கதைகள். 2. இதிகாசம் தழுவிய கதைகள். 3. சிறு தெய்வ வழிபாட்டுக் கதைகள். 4. சரித்திர வரலாற்றுக் கதைகள். 5. சமுதாயப்பாங்கான கதைகள்.

தமிழகத்திலே வில்லுப்பாட்டுக் கலைக்குப் புதுப்பொலிவு ஏற்படுத்தியவர் சாத்தூர் புலவர் பிச்சைக்குட்டி என்பவராவார். அவருடைய குரு புலவர் ஐயம்பிள்ளை. சமுதாய முன்னேற்றத்துக்கு ஏற்ற நல்ல பல கருத்துக்களை மக்களிடையே வில்லிசை மூலம் பரப்புவதில் வெற்றி கண்டவர் புலவர் பிச்சைக்குட்டி. காலத்துக்கு ஏற்ற வகையிலே வில்லுப்பாட்டுக் கலையைச் செம்மைப்படுத்தி-



யவர் அவர். தமிழ் மக்கள் அவரை "வில்லிசை வேந்தர்" என்று போற்றிப் புகழ்ந்தனர். வில்லுப்பாட்டுக் கலைக்கு புலவர் நவநீதக்கிருஸ்ணனும் பெரும் பணியாற்றியுள்ளார். வில்லுப்பாட்டுக் கலையை பட்டிதொட்டிகளிலெல்லாம் பரப்பி, பாமர மக்களும் வில்லிசையை ரசித்து மகிழும் நிலையை ஏற்படுத்தியவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

கலைவாணருக்குப் பிறகு தமிழகத்தில் திருவாளர்கள் சுப்பு ஆறுமுகம், குலதெய்வம் இராஜகோபால், தங்கப்பன், கொலப்பன், பார்த்தசாரதி, எஸ்.எஸ். இராஜேந்திரன் முதலியோர் வில்லிசை வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினர்.

அடியேன் 1959ம் ஆண்டு தமிழ் நாட்டிரே ஓவியக்கலை கற்றுக் கொண்டிருந்த காலத்திலே, பல வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. வில்லுப்பாட்டுக் கலையிலே எனக்கு தீவிர ஈடுபாடு ஏற்பட்டது. வில்லிசைக் கலைஞர் பார்த்தசாரதியிடத்திலே சிலகாலம் பயிற்சி பெற்றேன்.

ஓவியப் படிப்பை முடித்து 1960ம் ஆண்டு மட்டக்களப்புக்குத் திரும்பியதும் கலையாற்றல் மிக்க சிலரைச் சேர்த்து "மட்டக்களப்பு மாஸ்டர் லிங்கம் வில்லுப்பாட்டுக்குழு" என்ற பெயரில் ஒரு குழுவை ஆரம்பித்து குழுவினருக்கு பயிற்சி அளித்தேன். 60ம் ஆண்டில் எமது குழுவின் முதலாவது வில்லுப்பாட்டான "நமக்கு மேலே ஒருவனடா" என்ற வில்லிசை நிகழ்ச்சி மட்டக்களப்பு - கல்லடி உப்போடை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத் திருவிழா வைபவம் ஒன்றிலே அரங்கேறியது. முதல் நிகழ்ச்சி பலரதும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றது. அதைத் தொடர்ந்து ஈழநாட்டின் பலபாகங்களிலும் நூற்று இருபத்தைந்து மேடைகளில் பல தலைப்புகளிலே எமது குழுவின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எங்கும் நல்ல வரவேற்புக்கிடைத்தது.

இலங்கையில் திரு.சின்னமணி, திருப்பூங்குடி ஆறுமுகம், திரு லடீஸ் வீரமணி, உடப்பூர் சோமஸ்கந்தர், திருமதி இராஜம் புஸ்பவனம், சோக்கல்லோ சண்முகநாதன் முதலியோர் வில்லுப்பாட்டுக் கலை வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியோரில் குறிப்பிடத்தக்கவர்களாவர். பெரும்பாலான பாடசாலை விழாக்களில் வில்லிசை இடம் பெறுவது அதன் மாண்புக்குச் சான்றாகும்.

வில்லிசைக் கலை சக்தி மிக்க அபூர்வக் கலையாகும். வில்லுப்பாட்டின் மூலம் நல்ல கருத்துக்களை படித்தவர்களுக்கு மட்டுமன்றி பாலகர்களுக்கும் பாமர மக்களுக்கும் இலகுவில் புகட்டிவிடலாம். கனிந்த பப்பாசிப் பழத்திலே குண்டூசியை ஏற்றுவது போல, மக்கள் மனதிலே நல்ல கருத்துக்களை வில்லிசை மூலம் மிக இலகுவில் புகுத்தி விடலாம். மாண்பு மிக்க பழம்பெரும் கலையான வில்லுப்பாட்டுக் கலையை பேணிப்பாதுகாக்க வேண்டியது தமிழ் மக்களின் தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பண்பாடு

பேரறிஞர் வைத்தியகலாநிதி க.பாலசுப்பிரமணியம்
தவிசாளர், இலங்கா சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம், சுன்னாகம்

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் தோன்றியது தமிழ் இனம். படிப்படியாக நாகரிகமடைந்து சீர்திருத்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் தமக்கென தனியாக ஒரு மரபினைக் கொண்டிருந்தனர். தமிழ்ப்பண்பு மிக்கோர் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டனர். பண்பாளர், சான்றோர் என் பண்புமிக்குடையோர் அழைக்கப்பட்டனர். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு. உலகத்தில் மனித விழுமியங்களை உயர்வாக மதித்து நடப்பது சான்றோர் வழக்கம். மானிட சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் நன்மை பயக்கக்கூடிய ஒழுக்கம், நடத்தை, சிந்தனை, நோக்கம், செயற்பாடு, தொழில், பழக்க-வழக்கங்கள் மேலான மனிதப்பண்புகளாக மதித்துப் போற்றப்பட்டு வந்தன.

இதனையே மக்கள் திலகம் மாண்புமிகு முதலமைச்சர் இராமச்சந்திரன் எமது சிந்தனை, பேச்சு, செயல் எல்லாமே மக்களுக்கு நன்மை விளைவிப்-பவையாக இருத்தல் வேண்டும் என்றார். தமிழர் வாழ்க்கையை நான்கு பகுதி-களாக கண்டார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு ஆகும். அறம் இரு-வகைப்படும். அவை இல்லறம், துறவறம் எனப்படும். அவற்றுள் இல்லறமே மிகவும் சிறந்தது. அறம் இல்லாமல் பொருள் இல்லை. பொருள் இல்லாது இன்பமில்லை. இன்பம் இன்றி வீடு இல்லை. சித்தத்தினுள்ளே சிவனைக் கண்டார்கள். சீவனுக்குள்ளே சிவனைக் காட்டினார்கள்.

நிலத்தினை ஐந்தாக வகுத்தனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளாகும். நிலத்திற்கொரு பழக்கவழக்க பண்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். திணைக்கொருபண், பறை, யாழ் கொண்டு இசை பாடினார்கள். குறிஞ்சி நிலத்தில் தொண்டகம் என்ற பறையும், குறிஞ்சி யாழும் கொண்டு குறிஞ்சிப்பண் பாடினார்கள். ஏற்றுப்பறையும் முல்லையாழும் கொண்டு சாதாரி பண்ணை முல்லை நிலத்தில் பாடினார்கள். மருதநிலத்தில் இணைமுழவும் மருத யாழும் பாவித்து மருதப்பண் பாடினார்கள். கோட்பறை, நாவாய் பறையை முழக்கி விளரியாழ் வாசித்து செவ்வழிப்பண்ணை நெய்தல் மண்ணில் பாடினர். பாலை நிலத்தில் துடிப்பறை, பாலையாழ் பஞ்சுரம் என்ற பண்ணும் வழக்கத்திலிருந்தன.

மக்களைக் குடிகளாகக் கொண்டு மன்னன் முடியாட்சி நடத்தினான். குடிகளைப் பதினெட்டாக வகுத்தனர். அரசவையிலே ஒவ்வொரு குடிக்கும் ஒவ்வொரு உறுப்பினர் குடித்தலைவர்கள் அமர்ந்து நல்லாட்சி செய்தார்கள். குடித்தலைவன் பெருமகன் என விழிக்கப்பட்டான். அரசன் ஆட்சிக்கு உதவியாக மக்களின் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் இருந்தன. மக்கள் குழு (பெருமக்கள்), அறவோர் குழு (புலவர்), மருத்தர் குழு (மருத்தவர் குழு), நிமித்தர்



குழு (சோதிடர் குழு), அமைச்சர் குழு, ஆகியவை ஐம்பெருங்குழுவினர் எனலாம். எண்பேராயம் என்பது அமைச்சர், கணக்கர், அரண்மனை செயலர், சேனாதிபதி, ஒற்றர், வாயிற்காப்பாளர் (அரண்மனைக் காவலர்) யானை வீரர், குதிரை வீரர் ஆகியோர்.

தமிழை மூன்றாகப் பிரித்து இயல், இசை, நாடகம் என்றனர். இயல்பாக எழுதுவது இயற்றமிழ். ஓசை நயத்தோடும் இனிமையாக இசைப்பது இசைத்தமிழ். நாட்டின் கலை கலாசாரம் மரபு என்பவற்றையும், நாட்டு நடப்புக்களையும் எடுத்துக்காட்டி ஆடிப்பாடுதல் நாட்டியம் - நாடகம் ஆகும். தமிழ் இலக்கியம் தொண்ணூற்றாறு பிரபந்த வகையைக் கொண்டுள்ளது. அவற்றை மறந்து நாவல், சிறுகதை, புதுக்கவிதை என்பன தற்கால மேடைகளை ஆக்கிரமிக்கின்றன. தமிழில் அகத்தியம், தொல்காப்பியம், ஐந்திரம், நேமிநாதம் எனப் பல இலக்கணங்கள் உள்ளன. காகம் அன்னத்தைப் பார்த்து நடக்கலாம். அன்னம் காகத்தைப் பார்த்து நடக்க முற்படலாமா?

இவை அந்நிய சக்திகளின் ஊடுருவலின் விளைவா? தமிழினத்தை அழிக்கும் சதியா? இனம் வாழ வேண்டுமானால் அதன் தனித்தன்மை, கலை, மொழி, மரபுகள் பேணப்பட வெண்டும். அவற்றை அழித்துவிட்டால் இனம் தானாகவே அழிந்துவிடும். கல்வியை அழித்துவிட்டால், கலைகள், மொழி, தனித்தன்மை மரபுகள் அழிந்து விடும். ஆகவே மொழியின் தனித்தன்மை பேணப்படுகிற வகையிலே தமிழ் இலக்கியங்களை உருவாக்க வேண்டும். தமிழரின் உண்மை வரலாறுகளை இலக்கியங்களாக எழுதல் வேண்டும். தமிழியத்தின் மீது பற்றுக் கொண்டு தமிழைத் தமிழாகப் பேசுதல் வேண்டும். எழுதுதல் வேண்டும். தமிழ்ப் பண்பு, தமிழ் மரபு, தமிழ் நாகரிகம், தமிழ்ப் பாரம்பரியம், தமிழ் வரலாறு இலக்கியங்கள் கொண்டிருத்தல் வேண்டும். தமிழை வளர்க்க வேண்டியது தமிழர் கடமையாகும்.

இசைத்தமிழ் சிவன் செய்த அருஞ்சாதனை. உருத்திர வீணையை மீட்டி பாடி ஆடுகிறார். தமிழ்ப்பண்கள் 11991 இருந்தன. தாய்ப்பண்கள் 108 என்று அதில் பிங்கலந்தையில் 103 பண்கள் காணப்படுகின்றன. தமிழ்ப் பண்ணோடு பாடப்-பட்டவை தமிழ்ப்பாக்கள் இசைக்காகத் தனியிலக்கணம் கண்டவர்கள் தமிழர். முதுகுருகு, முதுநாரை, இசைநுணுக்கம், இராவணியம், யாழ்நூல் ஆகிய இசையிலக்கண நூல்கள் இருந்தன. தமிழிசை மக்களை, விலங்குகளை, தாவரங்களை, விண், வளி, தீ, நீர், மண்ணை இசைய வைத்தது. தேனினும் இனிய தமிழிசையால் சுந்தரர் இறைவனை ஏவல் கொண்டார். ஒப்பரிய தமிழிசையை மறந்து, தாய்தமிழை மறந்து தமிழ் மண்ணில் தமிழர் பிறமொழிப்பாடல்களைப் பாடுவது முறையா? தமிழ்தாய்க்கு செய்யும் வஞ்சனை இல்லையா? யாமறிந்த மொழிகளிலே இனிதாவது எங்கும் காணோம் என்று இந்திய மொழிகள் பல தெரிந்த சுப்பிரமணிய பாரதி பாடினான்.

உலக மொழிகள் பலவற்றைக் கற்ற தனிநாயக அடிகளார் யாமறிந்த மொழிகளிலே இனிதாவது எங்கும் காணேன் என்றார். நிறைகுடம் தளம்பாது. புலவர் போய் கவி வந்துவிட்டார். வட மொழிக்கவி இரட்டை அர்த்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. ஒன்று பாடலையியற்றுபவர், மற்றது குரங்கு. இரண்டும் பொருந்தும். இலக்கணம் இலகுவாகக் கிடைக்க வேண்டும். இலக்கணமில்லாமல் பழகுவது புதுக்கவிதை. சிறந்த இசையிலக்கணத்தைக் கொண்டுள்ள தமிழர்கள் இலக்கணமில்லாமல் ஏன் பாடவேண்டும். இவர்களுக்கு இலக்கணம் வராதா?

சங்கீதம், கருநாடக சங்கீதம் என்றெல்லாம் சிலர் நளினமாக அதனை உயர்வென்றெண்ணிப் பேசுவதை நாம் காண்கிறோம். தமிழ் வாயில் வராத தமிழர்கள் தமிழர்களா? யாராவது இசை மரபினை அறியாமல் ஒழுங்கில்லாமல் பாடினால் ஏன் கரடி கத்துமாப் போல கத்துகிறாய் என்று இசையாளர் நகைப்பது நாட்டிலுள்ள வழக்கு. சங்கீத விற்பன்னரை ஜாம்பவான் என்று புகழ்ந்துரைக்கும் வழக்கம் பிறமொழிகளில் உண்டு. ஜாம்பவான் என்றால் கரடி, தமிழர் பிற மொழியிசையை நகைப்பிற்குரியதாகவே ஆதியில் கருதினார்கள். தமிழ்க் கீர்த்தனைகள் நூற்றுக்கணக்கில் இருக்க தெலுங்கு கீர்த்தனைகள் தேவையா? பாடுவது தமிழர் கேட்பது தமிழர், பாடப்படுவது தமிழ் மண்ணில் பிறமொழி என்ன தமிழை விட உயர்ந்ததா? இல்லை அரசு கட்டுப்படுத்துகிறதா? தமிழர் இதயத்தை இழந்து விட்டனரா?

இலக்கணமாக உடுத்தத் தெரியாமல் ஏணல் கோணலாக அணிந்து வந்தால் அவரைப் பார்த்து என்ன சுத்தக் கருநாடகம் ஆக இருக்கிறார் என்று பழிப்பார். கருநாடகம் கேலிக்குரியதாகக் கருதப்பட்டது. கரடியும் குரங்கும் இயற்றிய சங்கீதத்தையா தமிழர் பாடவேண்டும். இந்த இழிநிலை இசைக் கலைஞருக்கு வரலாமா? பகுத்தறிவும், பட்டறிவும் எங்கே?

நாடகம் என்றால் உள்ளே நாடு உள்ளது, நாட்டினைப் பார்க்கலாம். நாட்டு இயம் தான் நாட்டியம் ஆனது. நாடகத் தமிழ் தனியிலக்கணம் கொண்டது. அந்த இலக்கணத்தில் நாடகங்கள் இயற்றப்பட வேண்டும். நடிக்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியத்தினை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதாக நாடகங்கள் அமைய வேண்டும். நாடகத்திற்கும் புத்துயிர் அளித்தவர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகள். தமிழ்ப்பாணியை மறந்து பிறமோடிகளா? சொந்த நாடகப் பண்புகளை இழப்பதா? மயிலைப் பார்த்து வான் கோழி ஆடிய காலம் மாறி வான் கோழியைப் பார்த்து மயில்கள் ஆடவா? மயில் ஆட வான் கோழி தடை செய்வதோ? கூத்தும் நாடகமும் வெவ்வேறாகும். ஆடிக்காட்டுவது கூத்து. நடித்துக்காட்டுவது நாடகம். நாக நாட்டியம், பல்லவ நாட்டியம் மறைந்து விட்டது. தமிழ் நாட்டிய நூல் பரதம் அழிந்தது. பாராத நாட்டிய மோகமா? தமிழ்ப் பரதக்கலை மாற்று வடிவத்தில் பாவ ராக தாளக்கலை எனப்படுகிறது. பண், ரசம், தண்ணுனம் கொண்ட தமிழர்களின் பரதம் - பரதநாட்டியம் எங்கே? நாட்டியக் கலைஞர்கள் தமிழ்ப் பரதநாட்டியம், நாகநாட்டியம், பல்லவநாட்டியம் மீண்டும் தமிழ் மண்ணில் மலர உதவ வேண்டும்.

தமிழிசைக்கருவிகள் மறைந்தும் மறக்கப்பட்டும் வருகின்றன. மிகவும் நுணுக்கமான ஒலிகளை எழுப்பக்கூடிய பல்வேறு தமிழ் இசைக்கருவிகள் இன்று புழக்கத்தில் இல்லை. மத்தளம், உடுக்கு, பறை, பேரிகை, முழவு, தாரை, தப்பட்டை, வீணை, யாழ், குழல், நாகசின்னம், தவில், ஒத்து, கொம்பு வாத்தியம்,



பம்பை, நையாண்டி மேளம், முரசு தமிழிசைக் கருவிகளுட் சிலவாகும். வீணையை எடுத்துக் கொண்டால் இராவணவீணை, உருத்திரவீணை, முகவீணை எனப் பலவாகும்.

யாழினை எடுத்துக் கொண்டால் அதில் பலவகை உண்டு. அவை பேரியாழ், சிறுயாழ், பெருங்கோட்டியாழ், சகோடயாழ், முல்லையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், விளரியாழ், பாலை யாழ் என்பனவாகும். இவை மீண்டும் இசையில் பயன்படுத்தப்பட வேண்டும். நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தினாலும் எங்கள் தனித்தன்மைகளை இழக்கக்கூடாது. தமிழிலுள்ள நாட்டுப் பாடல்கள் எல்லாம் தமிழிசைப்பாடல்களே. தேவார, திருவாசக, திருப்புகழ் எல்லாம் தமிழிசைப்பாடல்களே

தமிழ்ப்பண் ஒவ்வொன்றுக்கும் தனித்தன்மை உண்டு. பாரிய விளைவுகளை ஏற்படுத்த வல்லவை. புறநீர்மை பாடினால் விடிகிறது. மேகராச குறிஞ்சி பாடினால் இருள்கிறது. மங்கள கருமங்களுக்கு மங்கலப்பண்கள் பதினாறு பாடினார்கள். பகலிலே பாடப்படும் பண்கள் - 10 பகற் பண்கள் என்றும் இரவிலே பாடப்படும் பண்கள் 8 இராப்பண்கள் என்றும் அழைக்கப்பட்டன. 4 பொதுப் பண்களும் உள்ளன.

பண்கள் கர்த்தாராகம் எனப்படுகின்றன. திறம் ஜன்யராகம் எனப்படும். பதம் சுரம் எனப்படுகிறது. தமிழிசை கர்நாடகத்தில் சில மாற்றங்களுடன் கருநாடக சங்கீதம் என்று அழைக்கப்படுகிறது. காலையில் மருதப் பண் மாலையில் செவ்வழிப்பண் யாமத்தில் குறிஞ்சிப்பண் சந்தியில் காந்தாரப்பண் மத்தியானம் நட்டராகபண் பிற்பகல் கௌசிக பண் அந்திக்கு இந்தளப்பண் அர்த்தசாமம் பஞ்சமப் பண் என்று பொழுதுக்கு ஒரு பண் பாடினார்கள்.

திசைக்கொரு பண் பாடுவது வழக்கம் அவை கிழக்கு - காள்தாரம், தென்கிழக்கு - கொல்லி, தெற்கு - கௌசிகம், தென்மேற்கு - நட்டபாடை, மேற்கு - சீகாமரம், வடமேற்கு - தக்கேசி வடக்கு - தக்கராகம், வடகிழக்கு - காதாரி ஆகும். பேச்சு பழக்கவழக்கங்கள் மங்கலமாக இடம் பெற்றன. விளக்கினை அணை என்று சொல்வதில்லை. அணை என்பதற்கு வேறு அர்த்தமும் உண்டு என்பதனால் விளக்கினை நிறைத்தும் விடு என்பார்கள். பொருள் இல்லை என்றால் இல்லை என்று கூறமாட்டார்கள். இப்பொழுதுதான் சமைந்து விட்டது என்பர். மரண வீட்டில் சென்று வருகிறேன் என்று கூறமாட்டார்கள். செல்கிறேன் என்பார்கள். திருமண வீட்டில் போய் வருகிறேன் என்பர். இறந்து விட்டார் என்று கூட கூறுவது குறைவு. சிவகதி சேர்ந்துவிட்டார் என்றே தெரிவிப்பார்கள். மங்கைக்கு முதல் தீட்டு வந்தால் பூப்படைந்துவிட்டாள் என்று கூறுவார்கள். சூதகம் அல்லது மாதவிலக்கு வந்துவிட்டது என்று சொல்ல மாட்டார்கள்.

வேதனைகளைத் தணிக்கவும், நோய்களை நீக்கவும் பண்பாடினார்கள். மலைபடுகடாம் என்ற நூலில் வீரமகளிர் போரிலே வீரர்களுக்கு ஏற்பட்ட புண் ஆறவும் வேதனை தணிக்கவும் பண்பாடினார்கள். இதனை மறப்புண் காத்தல் என இலக்கியம் குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொடுவரிபாய்தன கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென
வறல் வாழ் கூந்தல் கொழச்சியர் பாட"

தெய்வத்தமிழ் பாடி சம்பந்தர், அப்பர், மணிவாசகர், சுந்தரர் அற்புதங்கள் அநேகம் நிகழ்த்தினர். தமிழ் உயிருள்ள மொழி. நக்கீரர் அகத்தியர் தமிழ்மேல் ஆணை என்று பாடி இறக்கவும் பின் உயிர் பெற்றெழவும் தமிழ்ப்பண் பாடினார். கனியிருக்க, காய் கவரலாமா? போரில் வெற்றி கிடைக்க வேண்டி படையணி வகுக்கும் போது பண்பாடுவார்கள்.

இராவணன் தமிழ்ப்பண் பாடி மலையிலிருந்து தப்பினான். சம்பந்தர் பாடி படிக்காசு பெற்றார். பொற்றாளம் பெற்றார். ஔவைப் பாட்டி பாடி பட்டமரம் தழைக்க வைத்தார். அருணகிரிபாடிய தமிழ்ப்பாடல் முருகனை அழைத்தது. அபிராமிபட்டர் பாடிய தமிழ்ப்பண் அமவாசையில் நிலவெறிக்கச் செய்தது. அருமருந்த தமிழ்ப் பண்களை மறந்து செத்த மொழிச் சுலோகங்களைப் பாடலாமா? கோவில்கள் மூடப்பட்டு வர தமிழ்ப் பண்கள் மறைந்து வருவதே காரணமாக இருக்கலாம் அல்லவா? திருமுறைகளை அழிக்கச் சதி செய்தார்கள்- இறைவன் சித்தம் அது தமிழருக்கு மீண்டும் கிடைத்தது. தமிழ்ப் பண்களின் வல்லமைகளை சொல்லால் அளவிட முடியாது.

அன்றாட கடமைகளையும் பண்பாடி செய்தார்கள். வயல் வரம்பு வேலைகளையும் பள்ளுப்பாடி செய்தார்கள். பண்களும், பண்ணுக்குரிய பாடல்களும் வாழ்க்கையில் பண்பாடும் வழக்கங்களும் மிகவும் அருகிக் காணப்படுகிறது. கலைகளின் ஒழுக்கம் கலாசாரமாகும். தமிழ்ப்பண் பாடுவது தமிழ்ப்பண்பாடு ஆகும். பண்பாடும் வழக்கம் மற்ற இனங்களில் இவ்வாறு வளர்ச்சியடையவில்லை.

இறைவன் "அர்ச்சனை பாட்டேயாகும். மண்மேல் கொற்றமிழ் பாடுக என்று சுந்தரருக்குத் திருவாய் மலர்ந்தருளினார். சைவமும் தமிழும் தமிழர்களின் இருகண்கள். ஒன்றை ஒன்று பிரிக்க முடியாதவையாகும். நாயன்மார் பண்ணோடு இசைபாடினார்கள்.

காந்தாரப் பண்பாடி - வெப்பம் தணிந்தது
கொல்ல பண்பாடி - வேதனை போக்கியது
கௌசிகப் பண்பாடி - நோய் நீங்கிற்று

தமிழ்ப்பண் பாடி வாழ்க்கையில் எல்லாக் கடமைகளையும் செய்வதே பண்பாடு அகும். தமிழ்ப்பண் பாடி வேலை செய்வது தமிழ்ப்பண்பாடு ஆகும். பண்பாடுதல் தமிழருக்கு மட்டுமே உரிய ஒரு தனி மரபு. பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்று பண்பினால் பாட அறிந்து ஒழுகுதல் பண்பாடு என கலித்தொகை தெரிவிக்கிறது. எண்ணம் பாடல் செயல் இணைத்து வழிவழியாக தொடர்ந்து வருகிற மரபு பண்பாடு.



சிறுகதை

# மாபெரும் புறப்பாடு

— நீ. பி. அருளானந்தம்

'மனைவி பிள்ளைகளை மேலும் இந்த இடத்தில் வைத்துக் கொண்டிருக்காது பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பிவிட்டேன்.. என்கிறதாகச் சொல்லக்கூடிய நிம்மதி அன்ரனுக்கு இப்போது இருந்தது. அடுத்துச் சிலநாட்களாக யாழ்ப்பாணத்தில் கூட இருக்க முடியாத அளவுக்கு 'செல்'சத்தங்கள் காதைப் பிளப்பது போல் இருக்க உடனே இடம் மாறும் முடிவை அவர் எடுத்திருந்தார்,

வீட்டிலே மனைவிக்கு அது விருப்பமில்லை. நேற்றைக்கு முதல்நாள் பின்னேரம் இதைப்பற்றிப் பேசும்போது,

"இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்பமே...." -என்றாள்.

"நீர் நினைக்கிறது மாதிரியில்ல இன்னும் ரெண்டொரு நாளில சிங்கள ஆமி யாழ்ப்பாணத்துக்க வந்திடும். அப்படி ஒரு பேச்சு காதில அடிபடுது" என்றார் இவர். அதைக்கேட்டு அவளும் கவலைப்பட்டுக் கொண்டு சிந்தித்தாள். அவர்களது கனிஷ்ட புத்திரன் வெளியே போய் உலாத்திவிட்டு வந்து மேல் சட்டையைக் கழற்றி கையில் வைத்துக் கொண்டு....

"அப்பா!... ஆமிக்காறங்கள் நீர்வேலியைத் தாண்டி வந்திட்டாங்களாம்..... எண்டுதான் கதைக்கிறாங்கள்" என்றான்.

அவன் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது அவனது இரு சகோதரிகளும் சற்பிரசாத ஆசீர்வாதம் முடிந்து மாதா கோயிலிலிருந்து வந்து நின்றார்கள். மூத்தவள் தம்பி சொல்வதைக் கேட்டுவிட்டு...

"ஓமோம்!... கோயிலேயும் உதைப்பற்றித்தான் கதைக்கினம். ஒண்டிரண்டு ஆட்கள் தான் ஆசிர்வாதத்துக்கும் வந்திருந்தவயள்" என்றாள்.

"தம்பிப்பிள்ளை .... குருநகர் சவுக்காலைப் பக்கம் போகாதேயுமென்ன... அங்க தான் செல் விழுகுது.. நேற்று ரவில கனக்க 'செல்' சத்தம் கேட்டுதெல்லே. அங்கதான் அதெல்லாம் விழுந்ததாம்... சவக்காலைச் சுவர் உடைஞ்சி சிதறுப்பட்டுக் கிடக்காம்" மூத்தவளுக்கு இளையவளான குணசீலி தம்பிக்குச் சொன்னாள்.

"எங்க நான் ஒருக்கால் அங்கினையாய்ப்போய் அதுகளை நேர பாத்திட்டு வந்திர்ரனே" என்று சொல்லிக் கொண்டு அவன் வெளிக்கிடவும்...

"சும்மா கொஞசம் வீட்டிலேயே இரும் நீர்... வெளியால வெளிக்கிட வேணாம்!" என்றாள் அக்காள். அப்படி அவள் எறி சொல்லாய்ச் சொல்ல அவன் முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொண்டு, எல்லோருக்கும் முன்பாக வெறுப்பாகி நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பியாண்டானுக்கு ஒண்டுமே முகத்துக்கு நேர சொல்லப்படாது. சரியான மூக்குறுஞ்சு மூஞ்சூறு" திரும்பவும் கடிந்து கொண்டாள் தமக்கை.

"இந்தக்காலத்துப் பிள்ளையளுக்கு கொஞ்சமும் பயமில்ல... யோசனையு-மில்ல... நாங்கள் ஏதோ பிள்ளயளை வீட்டுக்க வைச்சு பொத்திப் பொத்தி வளக்-கிறம் அதுகளுக்கு என்ன நடக்கப்போகுதோவெண்டு நாங்க இங்க துடிச்சுக் கொண்டிருக்கிறம். ஆனா, அதுகளெண்டால் ஒரு விளையாட்டு விளையாடிக் கொண்டு திரியிதுகள்" இப்படியாக அன்னை அதட்டி விரட்டவும் மகன் அடங்கி-விட்டான்.

இப்படியான குடும்ப விஷயத்திலெல்லாம் தகப்பன் எப்படியாக நடந்து கொள்வாரென்று நினைக்கின்றீர்கள்?

அவர் பிள்ளைகளை சினம் வரப்பண்ணக்கூடியதாக எப்போதுமே கண்டித்-துப் பேசுவதில்லை... எதற்கும் தன்மையாக நல்ல நல்ல ஆலோசனைகளை தக்க நேரத்தில் அவர் பிள்ளைகளிடம் எடுத்துச் சொல்வார். சாலமோன் அரசன் எழுதிய நீதிமொழிகளை பைபிளிலிருந்து படித்துப் பெறப்பட்டதால் உண்டாகிய அறிவு குடும்பவாழ்வை நல்வழிப்படுத்த அவருக்குத் துணை நிற்கிறது. அதனால்-தான் இந்தச் சந்தர்ப்பத்திலும் அந்த அறிவை துணையாகக் கொண்டு தீர்க்க-மான ஒரு முடிவை அவர் வேளைக்கே எடுத்தார்.

அவர் எடுத்த தீர்மானத்தின்படி குடும்பத்தை யாழ்ப்பாணத்திலிருந்து மிரிசுவிலுக்குப் போக வைக்க லொறி ஒன்றை கூலிக்குப் பிடிப்போம் என்று வெளிக்கிட்டதில்... அங்கே ஐயாயிரம் ரூபாய் இரக்கமில்லாமல் கேட்டார்கள். கூலி உச்சம்! என்று எங்கெங்குமே அலைந்தலைந்து கேட்டாலும் அதே தொகை-யைத் தான் திரும்பத் திரும்ப வாகனகாரர்களிடமிருந்து கேட்க முடிந்தது. எல்லா சனங்களுக்கும் அவதி ஓட்டம் இருக்கும் போது இங்கே குறைவான கூலிக்கு வாகனம் பிடிப்பது அசாத்தியமானது என்ற நிலைமை விளங்கியது. அவர் ஒன்றும் கனதனவான் அல்ல... என்றாலும், இந்த நேரம் பத்தைந்தைப் பாக்கக் கூடாது என்று அவர் நினைத்தார்.

இதனால் பிறகு சரி என்று சொல்லி அதற்கு ஒத்துக்கொண்டு ஒரு லொறியைப் பிடித்து வந்து பாத்திரம் பண்டங்களையும் ஏற்றி விலை மதிப்புள்ள பொருட்களையும் அதில் ஏற்றினார்.

இப்படி உள்ளதுரியதெல்லாம் எங்கேயாவது போய் இருந்து சீவிக்க காப்பாற்றப்பட வேண்டுமே என்ற நோக்கில் செயல்பட்டார். எல்லா காரியமும் ஆகி முடிந்ததும் வாகனத்தில் வீட்டார்கள் ஏறும்போது,....

"நீங்களும் வரலாம்தானே உங்க தனியக் கிடந்து என்ன செய்யப் போறீங்க' என்று அவருடைய மனைவி கேட்டாள்.

"உடன எங்கயும் வெளிக்கிட்டுக் போக சயிக்கிள் கிடக்கு... இரவுக்கு நீங்க வைச்சிட்டுப் போற சாப்பாடிருக்கு தேத்தண்ணி குடிக்கவெண்டும் பிளாக்ஸ்சில் சுடுதண்ணியிலுக்கு. நீங்க பயப்படாதேயுங்கோ இருந்து பாத்திட்டு வாறனே" என்றார் அவர்.



அவர்கள் வெளிக்கிட்டுப் போனதற்குப் பிறகு அன்று முழுக்க எல்லா இடமும் அலைக்கழிந்து திரிந்து அங்கம் உலைந்து போன சோர்வில் வீட்டு வெளி விறாந்தையில் கிடந்த வாங்கில் போய் படுத்ததும் அப்படியே அவர் கண்ண-யர்ந்து விட்டார்.

இயற்கையின் எழில் கொஞ்சும் யாழ் குடாநாட்டிலே ஒருகாலம் பறவைகளின் இன்னிசை கானம்தான் காலையும் மாலையும் இங்கு வாழ்ந்தவர்கள் செவிகளில் கேட்டுக் கொண்டிருந்தன. இப்போதோ! பயங்கர செல் சத்தங்கள்தான். இங்கிருப்-பவர்கள் நெஞ்சங்களை தக்குத்தக்கு' என்று அடித்துக் கொள்ளச் செய்கின்றன. இங்கு சீவிப்பவர்கள் யாராவது யுத்தம் நடக்கும் காலத்தில் ஒரு நாளைக்காவது நிம்மதியாக நித்திரை கொண்டிருப்பார்களா? சொல்லட்டும் பார்க்கலாம்!

பின்னேரக்கைக்கு அவ்விடத்துக்கருகில் வந்து விழுந்து வெடித்த செல்களின் சத்தங்களைக் கேட்டு பதறி உதறிக் கலக்கமுற அன்ரன் எழுந்துவிட்டார். 'அயர்ந்து நித்திரை கொண்டு விட்டேனா' என்று பயப்பட்டுப் போய் தன்னைத்தானே அவர் கேள்வி கேட்டுக் கொண்டார்.

இப்படியான நேரங்களில் 'சவம் போல கிடந்து நித்திரை கொள்ளக்கூடாது' என்றுதான் எல்லோரும் ஜாக்கிரதையாக இருப்பார்கள்.

'செல் சத்தங்களை அடுத்து. வெளிவீதி வழியே ஒலிபெருக்கியில் - சொல்லிக் கொண்டு போன அறிவித்தல் சரியாக அவருக்கு விளங்கவில்லை. வீட்டுக்கு வெளியே வந்தால் விஷயத்தை அறிந்து கொள்ளலாம் என்று வீதிக்கு வந்தார். அவரைப் போலவே அடுத்த வீட்டுக்காரரெல்லாம் அவ்விடத்தில் வந்து மொய்த்திருந்தார்கள். 'என்ன நடந்ததோ'... நினைக்கப் பயமாக இருந்தது அவருக்கு.

"பீக்கரில என்ன சொல்லிக் கொண்டு போகினம்" என்ற அண்டை வீட்டுக்காரரைக் கண்டதும் கேட்டார்.

"எல்லாரையும் யாழ்ப்பாணத்தால வெளிக்கிட்டுப் போகட்டாம்!"

"விளங்கேல்ல!"

"மூண்டு மணித்தியாலத்துக்க எல்லாரும் இங்கயிருந்து உடன அங்கால வேற இடங்களுக்கு போயிட வேணுமாமப்பா.... தம்பிமார் சொல்லுகினம்" -மனம் உடைந்து போய் அவர் சொன்னார்.

அங்கு நிற்கின்றவர்கள் முகத்திலெல்லாம் ஏமாற்றத்தின் சாயலே முகங்களில் வியாபித்திருந்தது.

'இன்னும் மூன்று மணித்தியாலங்களா'

'டிக்டிக்டிக்' என்று நேரம் சென்று கொண்டிருப்பதான உணர்வு சுவாசக்-காற்றையும் உஷ்ணமாக அவரிடமிருந்து வெளியேற்றியது.

பதைக்கப் பதைக்க வீட்டுக்கு வந்து சைக்கிளை எடுத்தார். அடிவயிறு வலிக்கு மட்டும் காற்றுப் பம்மைக் கொண்டு நிறையக் காற்றடித்தார். சாப்பாடு போட்டு மூடி வைத்திருந்த கிண்ணத்தை வயர்ப்பைக்குள் வைத்தார். சுடு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர்ப் போத்தலையும் பையினுள் பாட்டமாக நுழைத்தார். வீட்டைப் பூட்டி சாவியை எடுக்கும் போது வீட்டு நாய் அவருடைய காலை நக்கியது.

"பாவம்!... கறுமம்! எல்லாரும் நாயை மறந்திட்டுப் போகிறமே என்ன செய்வம்.

யோசித்தக் கொண்டு மாத்திரம் அங்கு அவர் நிற்கவில்லை. வீட்டுக்கு முன் உள்ள கடைக்கு ஓடினார்.

"இரண்டு றாத்தல் பாண் தாருங்கோ"

"அண்ணை'... லொறியில சாமான்களை ஏத்திறம்... என்னத்துக்கெணடு தெரியுந்தானே உங்களுக்கு!" முதலாளி இப்படியாக சொன்னார்.

"தம்பி...!" அவரைப் பார்த்து இரந்தார் இவர்.

"கொண்டு போங்கோ... இந்தாங்கோ!" பாணை எடுத்து நீட்டினார் கடைக்காரர். இவர் கையோடு காசை நீட்டினார்.

"சும்மா போங்கோய்யா!... ஒண்டுமே விளங்காத மாதிரி இந்த நேரத்தில நிண்டு கொண்டு செல்லம் விளையாடுறீங்க... இந்தாப்பா உடையிற சாமான்களை தனிய கவனமாவை...சுறுக்குப் பண்ணி ஏத்துங்கோப்பா"

இவரையும் அவர் நீட்டிய காசையும் கணக்கெடுக்காது வேலையாட்களோடு சேர்ந்து கடை முதலாளியும் சாமான் சக்கட்டுக்களை தூக்கிப் போட்டுக் கொண்டு நின்றார். வில்போல் வளைந்து முதுகு முறிகிற அளவுக்கு அவர்கள் வேலை செய்வதை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பாணோடு அவர் வீட்டுக்குத் திரும்பினார். முழுப்பாணையும் விண்டு, விண்டு ஒரு சட்டியில் போட்டு நாய்க்கு வைத்துவிட்டு வீட்டைப் பூட்டியதும் வீட்டு வாசலில் கிடந்த செருப்புக்களை பாதத்தால் துழாவி அணிந்து கொண்டு சயிக்கிளுடன் உடனே அவர் வீதிக்கு வந்தார்.

அங்கே சாதாரணமாக இருக்குமாப்போலத்தான் சயிக்கிளிலே சனங்கள் போய்க் கொண்டிருந்தார்கள். வீதியில் சன நெரிசலும் இல்லை. இடைவிட்டு மண்ணெண்ணெயில் ஓடுகின்ற வாகனங்கள் தான் ஆட்களை விலத்திக் கொண்டு விரைவாகச் சென்று கொண்டிருந்தன. இதே வீதியைப் போலத்தான் கண்டி வீதியும் நெரிசலில்லாமல் போக்கு வரத்துக்கு சுலபமாக இருக்கும் என்று அன்ரன் மனதுக்குள் கணக்குப் போட்டார். தடையில்லாமல் சுலபமாக சயிக்கிளில் சவாரி செய்யலாம் என்ற தனது திட்டத்தில் அவர் நம்பிக்கை வைத்திருந்தார்.

ஆனால், கண்டி வீதியை நெருங்கியதும் நிலைமை வேறு விதமாக இருந்தது. வீதியை நிறைத்து தலை எண்ணிப் பார்க்க முடியாத சனக்கூட்டம் திரள்திரளாகப் போகக் கண்டு அவர் அயர்ந்து விட்டார். அங்கே சயிக்கிளிலிருந்து இறங்கி நடப்பதைத்தவிர வேறு வழி இல்லாததால் அவர்களுடனே அவரும் சேர்ந்து கொண்டு சயிக்கிளை உருட்டிக் கொண்டு நடக்கலுற்றார்.

யாழ்குடா நாடெங்கும் வீதியின் இருமருங்கினிலும் தோரணங்கள் கட்டி சிறப்பாக விழாவெடுத்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு அவருக்கு அப்போது நினைவில் வந்து நின்றது. அதுதான் யாழ்ப்பாணத்தில் அவர் வீதி வழியே



பெரிதாகக் கண்ட சனக்கூட்டம். இத்தனை காலம் கடந்து கண்டிவீதியிலே அந்தளவு சனக்கூட்டத்தை திரும்பவும் காண்கையிலே பிரமிப்பு இவருக்கு.

நடந்து கொண்டிருக்கும் போது ஆளுக்காள் அங்கே கதைத்துக் கொள்வதை இவரால் பார்க்க முடியாவிட்டாலும் அவர்களது பேச்சுக் குரல்கள் கலாமுலாமென்று இவரது காதிலும் விழுந்து கொண்டே இருக்கின்றன.

திரண்டுவரும் சனங்களின் வேர்வை மணமும் அலையடிக்கின்றது. அவர்கள் அணிந்திருக்கிற காலணிகளால் உண்டாகும் அமளியும் தொடர்ந்தாற்போல் கேட்கிறது. இந்த நெரிசலுக்குள்ளே தெரிந்தவர்கள் யாராவது இருப்பார்களோ... என்று அக்கம் பக்கம் திரும்பி ஆரையும் அவரால் பார்க்கவே முடியவில்லை. அதற்குள்ளே மாட்டு வண்டில்களும், லொறிகளும், பழைய ஒஸ்ரீன் மொடல் கார்களும் வேறு அங்கே சனங்களோடு போட்டி போட்டுக் கொண்டு ஊடுருவிப்போக பிரயத்தனப்படுபவை போல் தென்படுகின்றன. இந்த மாதிரி நெருக்கடியான கஷ்டமான காட்சிகளைக் காணும் புதிய அனுபவம் உமட்டலாக இருந்தது அவருக்கு.

சைக்கிளை உருட்டிக் கொண்டு அந்த நெரிசலுக்குள்ளே செவ்வையாய் நடக்க அவரால் இயலவில்லை. பையப் பைய நடந்து கொண்டே ஒருவர் பிறகாலே ஒருவராய் செல்வது அன்ரனுக்கு பெரும்பாடாக இருக்கிறது. கால்களில் இருக்கும் பழைய செருப்பு அறுந்து விடாமல் லாவகமான கோணங்களில் பதித்து நடக்க வேண்டியதான கவனமும் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. நல்லூர் கோயிலில் அங்கப் பிரதட்சிணம் பண்ணும் பக்தர்களை அன்ரன் கண்டிருக்கிறார். கடைசியாக இளைத்துக் களைத்து உருண்டு கொண்டிருக்கும் அவர்களுக்குப் பின்னால் போகின்றவர்கள் போல இப்போது அவரும் இருப்பவராக அறிகிறார்.

இந்த மாபெரும் புறப்பாடு எங்கேதான் போய் முடியப் போகின்றதோ!... முன் ஒரு காலத்தில் எகிப்திய மன்னன் பார்வோனின் கீழ் அடிமைப்பட்டுப் போய்க் கிடந்த இஸ்ரவேலர்களை விடுவித்து 'ஜெகோவா' தேவனின் கட்டளைப்படி 'மோசே' என்பவர் அவர்களை பாலும் தேனும் பொழிகின்ற 'கானா' என்கிற தேசத்துக்கு அழைத்துப் போனார். ஆனால், இங்கே பாலும் தேனும் பொழிகின்ற செழிப்புடைய யாழ்நகரைவிட்டு அனாதரவான நிலையில் யாரிடமிருந்தும் எந்த உதவிகளும் இன்றி எங்கே போகின்றோம் என்ற திக்குமில்லை திசையுமில்லாத நோக்கில் அகதிகளாக மக்கள் வெளியேறுகிறார்கள். தாம் பிறந்த ஊருடன் இன்று வரை தொப்புள் கொடி உறவை வைத்திருப்பவர்கள் அது வெட்டுண்டது போல் உணர்ந்து நொந்தபடி போகிறார்கள். எல்லோரது முகத்திலும் சொந்த மண்ணை இழந்த சோகம் தெரிகிறது.

இதையெல்லாம் பார்த்து அதையெல்லாம் அவர் நினைக்க வேண்டியதாய் ஏன் வந்தது? அவர் பைபிளை தவறாமல் படிப்பவர். தன் வாழ்வின் நிகழ்வுகளையெல்லாம் பைபிள் வசனங்களில் பொருத்திப் பார்ப்பது எப்பொழுதுமே அவருக்குப் பழக்கமாகிவிட்டது.

இன்னமும் அவர் அங்கே பார்க்கும் போது... 'கடக்கடக்' என்று மேடு பள்ளங்களில் இறங்கி ஏறும் தாளகதியும் ஒலிக்க ஒரு மாட்டு வண்டி அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாலே அந்த வீதியாலே போய்க் கொண்டிருந்தது. அந்த மாட்டு வண்டியில் அம்மி, குழவி கனமான தடித்த கடகம், ஆட்டுக்கல் கூட ஏற்றப்பட்டுள்ளதாய்த் தெரிகிறது.

அதற்கு மேலே எத்தனை மண்வெட்டிகள், கலப்பை மேழிகள். எங்கே போய் இவர்கள் தோட்டம் கொத்தப் போகிறார்கள்? நிலத்தை உழுது விவசாயம் செய்யப்போகிறார்கள்?

உண்மைநிலை இதுதான். அவர்கள் விவசாயிகள். அவர்களுக்குத் தேவை மண்வெட்டியும் கலப்பையும்தான். ஆனால் இந்த நாட்டில் இனத்துவேஷம் கக்கும் போர் வெறிகொண்ட அரசியல்வாதிகளுக்கும், மதகுருமாருக்கும் என்ன தேவை-யாக இருக்கிறது? இந்த நாட்டில் நீடித்த ஒரு யுத்தமும் அந்த யுத்தத்துக்குத் தேவையான ஆயுதங்களும்தான் தேவையாக இருக்கிறது. யுத்தம் தொடர வேண்டும் அதிலே அவர்களுக்குப் பல நன்மைகள் இருக்கின்றன.

"அவர்கள் தங்கள் பட்டயங்களைக் கலப்பைக் கொழுக்களாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள். தேசத்தாருக்கு விரோதமாக தேசத்தார் பட்டயம் எடுப்பதில்லை! இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பது-மில்லை!" என்கிற இந்த வார்த்தைகள் ஐக்கிய நாட்டு சபையின் சதுக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. உலக சமாதானத்தை உருவாக்கும் லட்சியமுடைய இந்த மேற்கோளானது தீர்க்கதரிசி ஏசயாவால் முன்பு எழுதப்பட்டது. பைபிளில் உள்ள வாக்கியம் அது. இன்று ஐக்கிய நாடுகள் சபை அதை எழுதி வைத்திருக்-கிறது.

ஆனால், பட்டயங்களை கலப்பைக் கொழுக்களாக அடிக்க ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு நாட்டு அரசாங்கமாவது மனதார விரும்புகிறதா?

இந்த விஷயங்கள் யாவற்றையுமே அந்த வீதியால் நடந்து கொண்டிருக்கும் போது அன்ரன் ஞாபகப்படுத்திக் கொண்டு சிறிது நேரம் சிந்தித்தார்.

இவைகளையன்றி வேறு என்னதான் இந்த இடத்திலே அவருக்கு நினைவு வரும். இந்த இடப்பெயர்வுக்குப் பின் நாளைய வாழ்வு என்ன? பிள்ளைகளினது நிலை என்ன?

அதைச்சுற்றியும் நினைத்துக் கொண்டு மூளையைப் போட்டு குழப்பிக் கொண்டிருக்கையிலே நேரம் போனதே அவருக்குத் தெரியவில்லை. இருட்டுப்-பட்டு ஒரு மணித்தியாலம் கடந்து விட்டதாகத் தோன்றியது. இருட்டுக்குள்ளே குருட்டாம் போக்கிலே எல்லோரும் நடந்து கொண்டிருக்கிறார்கள். கண்கள் நல்லாய் இருட்டுக்குள் பழகி விட்டவர்கள்தானே இவர்கள். எங்கிருந்தோ-வெல்லாம் பெயர்தெரியாப் பூச்சிகள்கத்திக் கொண்டிருக்கின்றன. மோட்டார் வாகனங்களின் விளக்குகளும் அரிக்கன் விளக்குகளும் பிறகு வீதியை வெளிச்சமாக்குகின்றன. வெட்டவெளியான வானமெங்கும் நட்சத்திரங்கள் பூத்துப்போய்க் கிடந்தன. அங்கே ஒரு எரிநட்சத்திரம் இறங்கி மறைந்ததையும் அன்ரன் கண்டார்.



இந்த வழியே சுமைகளை தலையில் வைத்து கழுத்து வேர்க்கப்பலர் நடந்து கொண்டிருக்கிறார்கள். நீண்ட மொத்தக்கம்பிலே தொட்டில் போல் கட்டி முன்னுக்கும் பின்னுக்கும் இரண்டு தைரியமான ஆண்கள் சுமக்க அந்த ஏணைக்-குள்ளே தோல் சுருங்கி வற்றி உலர்ந்துபோன உடம்மையுடைய ஒருகிழவி பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு குந்திக் கொண்டிருக்கிறார். இக்கட்டான இந்த வேளையிலே ஆளையாள் சுமக்க வேண்டிய சுமை.... வீட்டிலே நீட்டி நிமிர்ந்து கிடந்து சாக வேண்டிய கொள கொளத்த பழம் மாதிரி இருக்கும் கிழங்களுக்கும் இடப்பெயர்வு...

இந்த வேளையிலே பொசுபொசுசென்று மழையும் தூறுகிறது. மின்னல் வாள் போல் மேகத்தை வெட்டுகிறது. காற்று மந்தகாசமாக வீசிக் கொண்டிருந்தது. இவ்விதம் பலகாட்சிகளையும் கண்டு துன்பக்கடலில் அமிழ்ந்து போயிருந்தார் அன்ரன். மேலும் அவரை உசுப்பிவிட்டது போல விழிக்கச் செய்தது ஒரு பெண்ணின் குரல்.

"தம்பி!.... தம்பி... தம்பி"

சனக்கூட்டத்துக்குள் அவருக்கு கிட்டவிருந்தும் கேட்கிறது மாதிரி இருக்கிறது... எட்டவிருந்தும் கேட்கிறது மாதிரி இருக்கிறது.... எட்டவிருந்தும் கேட்கின்றது போல ஐயமாகவும் தெரிகிறது அழுவாரைப் போன்ற அவளது அவலக்குரல்....

அந்தநேரம் தன் மகனையும் ஒருமுறை அவர் நினைத்தார். உடனே மனதில் சந்தேகப்பூச்சி ஊரத் தொடங்கிவிட்டது அவருக்கு. இதனால் நெற்றியில் அவருக்கு யோசனைச் சுருக்கங்கள் எழுந்தன. என்றாலும் மனதைத் திடப்-படுத்தி சமாளித்துக் கொண்டு அந்தப் பெண்ணைப் பற்றித்தான் பிறகு அவர் நினைத்தார். இந்த நெரிசலுக்குள்ளே தன்னுடைய தம்பியை எப்படித்தான் அவள் தேடிக் கண்டு பிடிக்கப் போகிறாள்... என்ற ஐமிச்சம் அவருக்கு வந்தது.

இதனால் குரல் வந்த தூரம் மட்டும் பிசகாத பார்வையாய்ப் பார்த்தார்.

ஒருமுகம் அழுது வடிந்தபடி அங்கே அவருக்குத் தெரிந்தது.

அவள்தான்... அவளேதான்....

சிவந்து கன்றிப் போன அந்த முகத்தைப் பார்க்கையில் ஐயோ பாவம் என்றிருந்தது அவருக்கு.

ஆனால், வினாடிகள் கடந்து கொண்டிருக்க மனிதத்தலைகள் அவள் முகத்தை மறைத்துப் போக அவரும் நடையோடு அந்த இடத்தை விட்டு கடந்துவிட்டார். என்றாலும் தம்பி... தம்பி என்ற அந்தக் குரல் அவரது காதில் ரீங்கரித்த வண்ணம் மனதைக் கரைத்துக் கொண்டேயிருந்தது.

அப்படியே நடை நடையாய் நடந்து கொண்டிருந்ததில் களைத்துப் போனார் அன்ரன். பசிவேறு குடலை விறாண்டவும் செய்தது. இதனால் வசதியாக வீதி மதகுக்குப் பக்கத்திலே அவர் நின்று கொண்டார். சயிக்கிளை சிமெண்டுக்கட்டில் சரித்து விட்டு சாப்பாடிருந்த கிண்ணத்தை பையிலிருந்து எடுத்து ஒரு கவளம் சாதத்தைப் பிசைந்து வாயில் வைத்தார். அது தொண்டை வழியே இறங்கியதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோ வயிறு செம்மினாப் போல இருந்தது அவருக்கு. நாவும் சுரைக்குடுவை போல சுவையற்றிருந்தது. இதனால் மேற்கொண்டு ஒரு கவளமாயினும் அவரால் சாப்பிடவே முடியவில்லை.

இப்போதும் 'தம்பி தம்பி' என்ற அந்தக் குரல்தான் காதில் கேட்டுக் கொண்டிருப்பதான ஒரு பிரமை எழுந்தது அவருக்கு.

இப்போது கேட்பது போலிருப்பது வெறும் நினைவுதான் அது உண்மையில்லை என்பது அவருக்குத் தெரியும். என்றாலும் மனதில் வீணாகப் பல எண்ணங்கள் காளான்களாக முளைக்கத் தொடங்கின.

உடனே சாப்பாட்டுக்கிண்ணத்தை மூடினார்.... தாகம் எடுத்தது... தண்ணீரைக் கொண்டு வராத தவறை இப்போதான் அவர் அறிந்தார். என்றாலும் சுடுதண்ணீர்ப் போத்தலிலுள்ள வெந்நீரை மூடியில் ஊற்றினார்... சுடுநீரின் ஆவி வெளிக் கிளம்பிக் கொண்டிருந்தது. சின்ன மூடியையும் கழற்றி ஆறமட்டும் கைநோவு எடுக்க ஆற்றினார். பின்பு குடித்தார்.

என்னவோ அந்தக் குளிர்ச்சியற்ற தண்ணீருக்குத் தவனம் அடங்கவில்லை. திரும்பவும் எல்லாவற்றையும் மூடி பையில் வைத்துவிட்டு மீண்டும் அவர் நடையைக் கட்டினார்.

நடுநிசி கடந்து சாவகச்சேரியை அண்மித்ததும் சனநெரிசல் குறைந்து விட்டது. அவரால் ஒருவாறு சயிக்கிளில் ஏறி சவாரி செய்ய முடிந்தது. குளிரால் விறைத்துக் களைத்தும் தொடர்ந்து பல மைல் கடந்த சயிக்கிள் சவாரியின் பின்பாக....

'விடியட்டும். அதன்பிறகு மனுஸி பிள்ளையள் இருக்கிற சொந்தக்காரற்ற வீட்ட போய்ச் சேரலாம்' என்ற எண்ணத்தில் வீதியருகிருந்த பஸ் தரிப்புக் கூடாரத்தில் சயிக்கிளை விட்டுப் பூட்டி விட்டு கால் கைகளை நீட்டிக் கொண்டு சீமெந்துக் கட்டில் படுத்தார்.

"ஆர் படுத்திருக்கிறது"

உடல் அலுப்பிலே அருவருப்பாக இருந்தது அவர்களது கேள்வி. இரண்டு இளைஞர்கள் தங்குமிடத்துக்கு வெளியே நின்று கொண்டிருப்பதை மங்கிய வெளிச்சம் காட்டியது.

"அது நான்!"

"நான் எண்டால் ஆர் நீர்?"

"இப்ப எனக்கு சரியான விலாசமில்ல நான் அகதி!"

தனது வேதனைகளை இப்படியாக வார்த்தைகளில் கொட்டினார். அவர்கள் இருவரும் மௌனமாகி விட்டார்கள்.

"வாடாப்பா போவம்"

ஒருவன் கூப்பிட்டான். பிற்பாடு சத்தமில்லை! எழும்பிப் பார்த்தார். அவர்களைக் காணவில்லை. தேய்ந்த நிலவு வானத்தில் தெரிந்தது.



விடிந்தது போலவும் இருந்தது. சயிக்கிளை எடுத்துக் கொண்டு மனைவி பிள்ளைகள் இருக்கும் குறிப்பிட்ட இடத்துக்குப் போனார்.

அந்த வேளை கிழக்கு வெளுத்து உதயம் கண்டது. சேவலின் கொக்கரக்கோவும் குருவிகளின் கிசுமிசுப்பும் கேட்கத் தொடங்கிவிட்டது. அந்த விடியலிலே படலைக்கு வெளியால் அவர்கள் எல்லோரும் நின்றார்கள். நித்திரை வெறியில் அவருக்குத் தலை 'கிறுகிறு'த்தது.

"ஏன் இதில எல்லாருமா நிண்டு கொண்டிருக்கிறியள்?"

பாம்பு போல் ஊர்ந்து நெழிந்த சந்தேகத்தோடு அவர் கேட்டார். பதில் இல்லை!

அவர்களுடைய முகம் துயரத்தால் கரிக்கட்டைபோல் ஒளியிழந்து கிடந்தது.

"என்ன நடந்தது? தம்பி எங்க?" பதட்டத்தோடு கேட்டார். அப்பொழுதும் பேச்சில்லை!

"ஊமைக் கோட்டான்களே சொல்லுங்கோவன் வாயைத் திறந்து" என்றைக்குமில்லாதவாறு புதிதாக இன்றைக்கு அவருக்குக் கோபம் வந்தது. அதைக் கணக்கெடுக்காது இரண்டு பெண்பிள்ளைகளும் சோகமே உருவாக நின்றார்கள். தாய் திக்பிரமை பிடித்தவள் போல இருந்தாள். இதயத்தை இயங்கவிடாமல் யாரோ அழுத்திப் பிடிப்பதுபோல வேதனை அவருக்கு எழுந்தது. பயத்தால் நலுங்க நெஞ்சடிப்பு அதிகரித்தது அவருக்கு.

"தம்பி எங்க தம்பி எங்கயெண்டு சொல்லுங்கோ"

கேட்டவாறு உள்ளம் துடிதுடித்தார். பயங்கர நினைவுகள் அவரது உடலைச் சாம்பி வதைத்துக் கொண்டன.

"தம்பியைக் காணோமப்பா. இயக்கத்துக்கு ஓடிட்டான் போல இருக்கு" துக்க சாகரத்தில் அழுகை பொத்துக் கொண்டு வர அடித்தொண்டை கமற குணசீலி சொல்லிக் கதறினாள்.

"தம்பி.... அடமோனே...ராசா"

அவர் வாய் பிதற்ற ஆரம்பித்துவிட்டார். அவரது உள்ளம் காளவாயாய்க் கொதித்தது. பேதலித்துப் போயிருக்கும் அவருடைய சாகரக் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கீழே விழுந்து சிதறின. இந்தத்துன்பமிகுதியாலே உடை உடல் குறித்த அக்கறை ஏதுமற்ற புழுதியில் அப்படியே 'தக்'கென அவர் உட்கார்ந்து விட்டார். அப்போது இரவு கேட்ட அந்தப் பெண்ணினுடைய துன்பக்குரல் நினைவுகளில் இழையோடி திரும்பவும் செவிகளில் தம்பி... தம்பி.. என்று இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருப்பது போல அவருக்குத் தோன்றியது. இப்போது அந்தக் குரல் தனது சோகத்தில் பங்கு கொள்வதாகவும் அவர் உணர்ந்தார். அவரைப் போல அவரது குடும்பத்தினர்களும் திக்பிரமை பிடித்துப் போய் நின்றார்கள். அவர்கள் எல்லோரும் நிலைகுத்திப் போன கண்களால் ஒருவரையொருவர் பார்த்தபடி கண்ணீர் வடித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்துக்களம்

# கூத்துக்கலை பற்றிய அபத்தமான கூற்றுக்கள்

**- அன்புமணி**

**ஓலை 20ல் வெளிவந்த பா.அமிர்தநாயகம் அவர்களின் கட்டுரையில் பல அபத்தமான கூற்றுக்கள் இடம் பெற்றுள்ளன. உண்மை நிலை வருமாறு.**

1. **மட்டக்களப்புக் கூத்து மட்டக்களப்புக்குத் தனித்துவமானதென்றால் அதற்கான ஆதாரம் ஏதேனும் உண்டா?**

ஆம். பலதலைமுறைகளாக, எந்தவித மாற்றமும் இல்லாமல், இக்கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. அவ்வாறு பல நூற்றுக்கணக்கான கூத்துக்கள் ஆடப்பட்டு வந்துள்ளன. யாழ்ப்பாணக் கூத்துக்களுக்கும் இவற்றுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

2. **மட்டக்களப்புக் கூத்துக்களில் யாழ்ப்பாணக் கூத்துக்கள் போன்று முழு இரவுக் கூத்துக்கள் உண்டா?**

இது ஒரு அபத்தமான கேள்வி. மட்டக்களப்புக் கிராமங்களில் ஆடப்படும் கூத்துக்களை இவர் பார்க்கவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகிறது. மட்டக்களப்பில் கூத்துக்கள் விடிய விடிய ஆடி விடிந்தபின்பும் ஆடுவார்கள். அதுவே இவற்றின் தனித்துவம்.

3. **மட்டக்களப்புப் புலவர்களால் 16, 17ம் நூற்றாண்டுகளிலிருந்து இற்றைவரை பாடப்பெற்ற கூத்துக்கள் எவை எவை என வரிசைப்படுத்திக் காட்ட முடியுமா?**

நூற்றுக்கணக்கான கூத்துக்கள் உள. பட்டியல் நீளமானது. மட்.கச்சேரி கலாசாரப் பேரவை, வெளியிட்டுள்ள 'கூத்துக்கலை ஆவணப்படுத்தல்' என்ற சிறப்பு மலரில் சில விபரங்கள் வெளிவந்துள்ளன. (இதன் பிரதியை 'ஓலை' ஆசிரியருக்கு அனுப்புகிறேன்.)

4. **நான் அறிந்தவரை மட்டக்களப்பில் ஆடப்பட்டு வந்த பிரபலமான கூத்துக்கள் யாழ்ப்பாணப் புலவர்களால் பாடப்பட்டவைதான்**

இது அப்பட்டமான பொய். மட்டக்களப்பில் உள்ள நூற்றுக்கணக்கான கூத்துக்கள் மட்டக்களப்புப் புலவர்களாலேயே பாடப்பட்டவை. கூத்துக்கலை ஆய்வில் நீண்ட காலம் ஈடுபட்டுள்ள பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி பேராசிரியர் சி.மௌனகுரு, மற்றும் இவர்களைப் போன்ற பலரில் எவராவது மட்டக்களப்புக் கூத்துக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவை எனக்கூறவில்லை. கவனிக்கவும்.

5. **இராமநாடகம், தர்மபுத்திரன் (அனுவுத்திரன்) விராட நாடகம், கோவலன் கண்ணகி, அதிரூப அமராவதி அலங்கார ரூபன் போன்ற கூத்துக்கள் மட்டக்களப்பில் ஆடப்பட்டு வந்துள்ளன. இவைகள் மட்டக்களப்பிற்கு வரக் காரணமாக இருந்தவர்கள் யாழ்ப்பாணக் கூத்தர்களும், அண்ணாவிமார்களும் தான்.**

இது மற்றொரு அப்பட்டமான பொய். சான்றுகள்

(அ) இவை யாழ்ப்பாணக் கூத்துக்களாக இல்லை.

(ஆ) யாழ்ப்பாணக் கூத்துக்களோ, அண்ணாவிமாரோ மட்டக்களப்பில் இருக்கவில்லை.

(இ) மட்டக்களப்பில் கூத்துப் பழக்கிய யாழ். அண்ணாவிமார் எவருமில்லை.

(ஈ) இக்கூத்துக்கள் யாழ்ப்பாண ஆட்ட முறையில் இல்லை.

(உ) மட்டக்களப்பு கலாசாரப் பேரவையால் வெளியிடப்பட்ட "இராமநாடகம்" "அனுவுத்திர நாடகம்" (பண்டிதர் வி.சீ.கந்தையா பதிப்பித்தவை) அதுபற்றி எவ்வித குறிப்புகளும் இல்லை.

6. **வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள்**

இவைபற்றி அமிர்தநாயகம் தெரிவித்துள்ள கூற்றுக்கள் ஆதாரமற்றவை. இவை இரண்டு வகையான கூத்துக்கள். தென்மோடியிலிருந்து வடமோடி தோன்றியதென்பது முட்டாள்தனமான வாதம். இவைபற்றிய விபரம் அறிய பேராசிரியர் சி.மௌனகுரு எழுதிய "மட்டக்களப்பு மரபுவழி நாடகம்" என்னும் பாரிய ஆராய்ச்சி நூலைப் பார்க்கவும்.

7. **இந்திய வடபாங்கு நாடகங்கள் ஈழத்திற்குப் படை எடுத்ததன் காரணத்தால் அக்கூத்துக்களைப் பார்க்க மக்கள் பெருந் திரளாகக் கூடியிருந்து பார்ப்பதனாலும் நாட்டுக் கூத்துக்களும் இந்திய நாடகங்களின் ஒப்பனை வடிவங்களுக்கு மாற்றமடையக் காரணமாகிவிட்டது.....**

இப்பந்தியில் கூறப்பட்டுள்ள அத்தனை விடயங்களும் சம்பந்தா சம்பந்தமில்லாதவை. இந்திய வடபாங்கு நாடகங்களால் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் "ட்ராமா"க்காள் தோன்றினவேயன்றி கூத்துக்கள், குறிப்பாக மட்டக்களப்புக் கூத்துக்கள் எவ்வித பாதிப்பும் அடையவில்லை.

8. **யாழ்ப்பாணத்திலும் வட்டக்களரியில் தான் கூத்துக்கள் ஆடப்பட்டவை என்னும் கூற்று.**

அப்படியானால் நாடகமேடை வடிவில் அந்தக் காலத்திலேயே மாற்ற வேண்டிய அவசியம் என்ன?

உண்மை என்னவெனில் மட்டக்களப்பில் பழங்கால முறைப்படி கூத்துக்கள் வட்டக்களரியில் அன்று முதல் இன்றுவரை ஆடப்பட்டு வருகின்றன. எனவே யாழ்ப்பாணக் கூத்துக்களை விட அவை வித்தியாசமானவை. தனித்துவமானவை. யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவை அல்ல.

9. **இக்கலையைப் பலகூறுகளாகப் பாங்கு சொல்லி இனத்தைக் கூறுபோடுகிறார்கள்....**

இது ஒரு விசர்த்தனமான கதை. இனத்தை யார் கூறுபோட்டார்கள்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமோடி, தென்மோடி என்பது இருவகையான ஆட்டங்களே தவிர (Style) இனத்தைக் கூறுபோடும் விஷயமல்ல என்பது வெளிப்படை.

10. ***அவருடைய ஊருக்குக் கூத்துப் போனதே யாழ்ப்பாணத்தில் இருந்துதான். அவர் பிறந்த மண்ணில் கூத்து அழிந்து போனதை அறிய மாட்டார் போலும்.***

இதென்ன புதுக்கதை. விடிய விடிய ராமாயணம் பார்த்து.... என்ற கதைதான். மட்டக்களப்பில் கூத்துக்கலை அழியவில்லை. அது இன்றும் தொடர்கிறது. ஒழு விடயம் இவர் (அமிர்தநாயகம்) மட்டக்களப்புக் கூத்துக்களைப் பார்க்கவேயில்லை. கூத்து ஆடவில்லை. கூத்துடன் சம்பந்தப்படவில்லை. கூத்தை ஆய்வு செய்யவில்லை. எந்தவித தகுதியும் இல்லாமல் கூத்தைப் பற்றிப் பேச வந்துள்ளார். தயவு செய்து பேராசிரியர் மௌனகுருவின் ஆய்வு நூலைப் படியுங்கள். அவர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வன்னி, மட்டக்களப்பு முதலிய பிரதேசங்களில் ஏராளமான கூத்துக்களைப் பார்த்தவர். ஏராளமான கூத்து ஒளிப்பேழைகளை சேகரித்து வைத்துள்ளவர்.

தொகுத்துக் கூறினால் (1) யாழ்ப்பாணத்திலிருந்து தான் மட்டக்களப்புக்குக் கூத்துக்கலை வந்தது என்பது அப்பட்டமான பொய் (2) வடமோடி, தென்மோடி எனக் கூத்தைப் பிரிக்கக்கூடாது என்பது அப்பட்டமான அப்பாவித்தனம்.

# உதவும் கரங்கள்

**ஓலை ஓங்கி வளர்வதற்காக உதவிக் கரங்கள் வழங்கிய இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்**

| | |
|---|---|
| T. சோதிராஜா, அவுஸ்திரேலியா | 3,674.00 |
| R.தங்கவடிவேல், சுவிஸ்சர்லாந்து | 3,668.00 |
| க.சக்திதாஸன், டென்மார்க் | 1,500.00 |
| பே.பாலராஜா, ஜேர்மனி | 1,090.00 |
| சு.பற்குணம், கொழும்பு -12 | 501.00 |
| எஸ்.முத்துமீரான், நிந்தவூர் (கி.மா) | 500.00 |
| Dr.எம்.கே.முருகானந்தன், கொழும்பு -06 | 500.00 |
| அ.சிவனேசராஜா, மட்டக்களப்பு | 500.00 |
| க.செல்லத்தம்பி, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 500.00 |
| யோ.கார்த்தீபன், நீர்கொழும்பு | 360.00 |
| தில்லைச்சிவன், யாழ்ப்பாணம் | 300.00 |
| எஸ்.வன்னியகுலம், திருகோணமலை | 200.00 |
| பேராசிரியர்.சோ.சந்திரசேகரம், கொழும்பு -06 | 200.00 |



# மறுவோலை

▶ தங்களது "ஓலை" 18 வது கிடைக்கப் பெற்றுப் படித்து அகமகிழ்ந்தேன். தங்களது தமிழ்ப் பெரும் பணி சிறப்புற்றோங்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரியப் பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் சங்கத்தின் 18 வது மாதாந்த இசை நிகழ்ச்சியில், லண்டன் திரு.மாணிக்க யோகேஸ்வரன் அவர்களின் இன்னிசைக் கச்சேரிப் படம், சங்கப் பலகை, "கவிஞர் மஹாகவி கவிதைகள் கவிதாமாலை", வித்துவான் க.ந.வேலன் அவர்கள் பற்றிய அஞ்சலி" என்பன உட்படப் பல அரிய பெரிய விடயங்கள் "ஓலை" 18ல் இடம் பெற்றுள்ளமை மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

"ஏழிசையாய் இசைப்பயனாய்" "பண்ணின் இசையாக இருக்கும் இறைவன் திருவருளாலும், குருவருளாலும் -"ஓலை"யின் தமிழ்ப் பெரும் பணி வாழ்க!" என வாழ்த்துகின்றேன்.

15/6, குமாரசாமி வீதி — ***கலாபூசணம் தாவடியூர்***
கந்தர்மடம். யாழ்ப்பாணம் — ***கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன். ஜே.பி.***
**26.01.2004**

▶ "தாங்கள் அனுப்பி வரும் 'ஓலை' ஒழுங்காக கிடைத்து வருகின்றது. நான் இலண்டன் சென்றாலும் இங்கு வீட்டு முகவரிக்கு வரும் இதழ்களைப் பெற்று வருகின்றேன். கடைசியாக கிடைத்த ஆகஸ்ட் மாத இதழ் கலாசூரி சிவகுருநாதன் அவர்களின் நினைவிதழாக வெளிவந்தது வரவேற்கத்தக்கது. பலதுறைகளிலும் இலக்கிய, எழுத்துப் பணியாற்றியதற்கு சங்கத்தின் தலைவராக இருந்ததற்கு நன்றிக்கடன் செலுத்தப்பட வேண்டும்.

அவர் பற்றி பலர் எழுதியுள்ள விடயங்கள் பயனுள்ளவை.

'ஓலை' இலக்கிய உலகிற்கு நற்பணி ஆற்றி வருகிறது தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்கள்.

9, 7 th Lane, Kotahena — ***ஐ.தி.சம்பந்தன்***
Colombo -13
**2.02.04**

▶ இலக்கிய ஆளுமையில் விளைந்து பளிச்சிடும் 'ஓலை'கள் ஒழுங்காகக் கிடைக்கின்றன. எல்லா ஓலைகளையும் படித்து, மற்றவர்களும் பயன் பெறும் முறையில், அழகாக கட்டி, என் நூலகத்தில் வைத்துள்ளேன். இலங்கையின் இலக்கிய வரலாற்றினையும், சமூகப் பின்னணிகளின் தாக்கங்களையும் அதன் வளர்ச்சியினையும், தமிழுக்கு உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தவர்களின் பங்களிப்புகளையும் கோடிட்டுக் காட்டிவரும் ஓலை, இலங்கை வாழ் இலக்கியப் படைப்பாளிகளின் ஆக்கங்களுக்கு எவ்வித பாகுபாடுமின்றி நல்ல இடம் கொடுத்து ஊக்கமளித்து வருவது அதன், தூய்மையான நன்னோக்கத்திற்கு சிறந்த எடுத்துக் காட்டெனலாம்.

ஓலை, எவருடைய சிறுமை நோக்கிற்கும் அடிபணியாமல், குறுகிய காழ்ப்புணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு, "நல்லவைகள் எல்லாம் நமதே" என்னும் சீரிய பணியில் சிறந்தோங்க இறைவனைப் பிரார்த்தித்து, வாழ்த்துகிறேன்.

நாட்டார் இலக்கியங்களுக்கும் நல்லஇடமளித்து அவர்களின், மண் வளச் சொற்கள் செழித்தோங்க, அயராது பாடு பட்டுக் கொண்டிருக்கும் நண்பர் கவிஞர் செங்கதிரோன் என்றும் கௌரவிக்கப்பட வேண்டியவர் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பது என் அசையாத நம்பிக்கை.

**AL.HAJ S.Muthumeeran, L.L.B., J.P.U.M.**

"Pearl"
Nintavur - 12
Sri Lanka.
**04.02.2004**

கொழும்புத் தமிழ் சங்கத்தின் 'ஓலை' 18 வது இதழ் கிடைக்கப் பெற்றேன். கையில் கிடைத்ததுமே களிப்பு மிகை கொண்டேன். 'மல்லிகை' யின் மணம் ஒத்த 'ஓலை'யை எனக்கு அனுப்பி வைத்தமைக்கு முதற் கண் மனமார்ந்த என் நன்றிகள்.

இலக்கிய நிகழ்வுகளையும், இனிய இலக்கிய நினைவுகளையும் சுவைபட தாங்கிஇனிதே வெளிவரும் இந்த ஓலை சஞ்சிகை, இடரின்றி இடை நடுவே விடாது, இடைவிடாது இனிதே பவனி வரவேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

மாதாந்த மடல் என அட்டையில் குறிப்பிட்டிருந்த போதிலும் யூலை 2003 இதழ் ஜனவரிமுதலாம் வாரமே என் கரம் கிட்டியது. தாமதம் ஏனோ யாமறியோம். 'ஓலை' என்றால் மடல் என்று பொருளல்லவா? நம் நாட்டு சாதாரண மடல்கள் எல்லாம் மிகவும் தாமதமாகவே உரியவரை சென்றடைகின்றன.ஒருவேளை, ஓலை என்று பெயர் வைத்திருப்பதனால் தான் இந்த தாமதமோ?

எதுவாயிருப்பினும் இலக்கிய தாகம் தீர்க்கும் இளநீர் போல் திகழும் 'ஓலை' தாமதமின்றி எம்மை வந்தடைய வேண்டும்.

நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்
கொழும்பு மாவட்ட தகவல் அதிகாரி
அரசாங்கத் தகவல் திணைக்களம்

மாவட்ட தகவல் பிரிவு
மாவட்ட செயலகம்
கொழும்பு -12
**07.02.2004**


தமிழ்ச் சங்கத்தின் குரலாய்
தரணி எங்கும் ஒலிக்க
ஓலை ஓயாமல் வர
வளர எம் இதயம் கனிந்த வாழ்த்துக்கள் !

வகுப்பு 1 தொடக்கம் 10 வரை
க.பொ.த (சாதாரணம்)
க.பொ.த (உயர்தரம்)
(கலை / விஞ்ஞானம் / வர்த்தகம்)
ஆங்கிலம் / தமிழ் பேச, எழுத, வாசிக்க
சட்டக் கல்லூரி புகுமுக வகுப்புகள்
அனைத்தும் நடைபெறுகின்றன

**சங்கம் கல்வி நிலையம்**

**உருத்திரா மாவத்தை**
**வெள்ளவத்தை**
**தொலைபேசி : 2361381**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வெள்ளவத்தை

## நித்தியகல்யாணி நகை மாளிகையில்

# அப்பழுக்கற்ற வைரம்

பெல்ஜியம் (Belgium)

சர்வதேச இரத்தினக்கல்லியல் நிறுவனத்தினால்

(International Gemmological Institute)

உறுதிப்படுத்தப்பட்டு - பரிசோதிக்கப்பட்டு

உத்தரவாதமளிக்கப்பட்டு - மாற்றமுடியாதபடி

பைகளில் மூடித் தாளிடப்பட்டது.

## வெள்ளவத்தை

# நித்தியகல்யாணி ஜுவலரி

230, காலி வீதி, கொழும்பு - 06.

தொலைபேசி : 2363392, 2362427

தொலை நகல் : 2504933

மின்னஞ்சல் : nithkal@slt.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org